பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆணி 14 | வெள்ளிக்கிழமை | 30.08.2024 | அதிர்வு 028

## சஜித்தும் அநுரவும் கோட்டா வழியில்!

### ரணில் கடும் சாடல்



கோட்டாபய ராஜ பக்ஷவின் பொருளா தார வேலைத்திட் டத்தையே 06




# புதிய நாடாளுமன்றில் ஒரு வருடத்துக்குள் புதிய அரசமைப்பு!

## தேர்தல் விஞ்ஞாபனத்தில் ரணில் உறுதி

"ஜனாதிபதித் தேர்தலையடுத்துவரும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் ஒரு வருட காலத்துக்குள் புதிய அரசமைப் பைத் தயாரிக்கும் பொறுப்பை நான் நாடாளுமன்றத்துக்கு வழங்குவேன்."

- இவ்வாறு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 06

## தமிழரின் வாக்குகளைச் சிதறடிக்காமல் அனைவரும் ஒருமித்து நிற்பதே சிறந்தது

### தமிழ்ப் பிரதிநிதிகளிடம் அஜித் டோவல் அறிவுரை

இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோச கர் அஜித் டோவலுக்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக் கும் இடையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சந்திப்பின்போது தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரம், தேர்தல் புறக்கணிப்பு கோஷம் உள்ளிட்ட பல் வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் விரிவா கக் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது கருத்து வெளியிட்ட இந் திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், இம்முறை ஜனாதிப தித் தேர்தலில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது குறித்து தான் 05





இந்திய பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால் கொழும்பு வந் துள்ளார்.

அவரது பதவி இந் திய அமைச்சரவை அந் தஸ்துள்ள அமைச்சர் ஒருவருக்கு நிகரானது. இந்தியாவில் பிரதமரின் சார்பில் போரை யும் சமாதானத்தையும் தீர்மானித்துப் பிரக டனப்படுத்தும் தகுதியுடைய ஒருவருடைய பதவி நிலை அது.

அவர் அரசியல்வாதி அல்லர். இராஜ தந்திரியும் அல்லர். அரசியல்வாதிக்கும் அதிகாரிக்கும் இராஜதந்திரிக்கும் இடைப் பட்ட உயர் பாதுகாப்பு தர நிலையில் கணிக் கப்படக் கூடியவர்.

அவருடனான சந்திப்புக்கு அனைத்து தமிழ் கட்சியினரும் அழைக்கப்பட்டு இருந்த னர். ஆயினும் நான்கு பேர் மட்டுமே சந்திப் பில் பங்குபற்றினர். 05




# 9 மாகாணங்களிலும் தேர்தல் கண்காணிப்புப் பணிகளை ஆரம்பித்தது ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்புக்குழு

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தேர்தல் கண்காணிப்புக்குழுவில் உள்ளடங்குகின்ற நீண்டகாலக் கண்காணிப்பாளர்கள் 26 பேர் கண்காணிப்புப்பணிகளுக்காக நேற்று நாட்டின் 9 மாகாணங்களுக்கும் பிரித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், வழமைபோன்று இம்முறையும் தேர்தல் கண்காணிப்புப் பணிகளை முன்னெடுக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத் துக்கு தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வ அழைப் பொன்றை விடுத்திருந்தது.

அவ்வழைப்பு ஐரோப்பிய ஒன்றியத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதை அடுத்து இம்மாதத் தொடக்கத்தில் தேர்தல் கள் ஆணைக்குழுவுக்கும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையில் இதுகுறித்த நிர்வாகமட்ட உடன்படிக்கை கைச் சாத்திடப்பட்டது.

அதற்கமைய பிரதி தலைமைக் கண்காணிப்பாளர் ஒரு வரையும், தேர்தல் கண்காணிப்பு நிபுணர்கள் 9 பேரையும் கொண்ட குழுவொன்று கடந்த 13 ஆம் திகதி நாட்டை வந்த டைந்தது.

அதேவேளை நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்த 26 நீண்டகாலக் கண்காணிப்பாளர்கள் நேற்று வியாழக் கிழமை ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தேர்தல் கண்காணிப்புக்குழுவின் தலைமைக் கண்காணிப்பாளர் நச்சோ சன்செஸ் ஆமரால் கொழும்பு ஹில்டன் ஹோட்ட லில் இருந்து நாட்டின் 9 மாகாணங்களுக்கும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காகப் பிரித்து அனுப்பிவைக்கப்பட்டனர்.

தமது கண்காணிப்புக்குழுவில் நீண்டகாலக் கண்காணிப் பாளர்களின் வகிபாகம் மிகமுக்கியமானது எனச் சுட்டிக் காட்டியிருக்கும் தலைமைக் கண்காணிப்பாளர் நச்சோ சன்செஸ் ஆமர், "அவர்களது அவதானிப்புக்களும், அதனடிப் படையிலான தகவல்களும் தேர்தல் செயன்முறை தொடர்பில் பக்கச்சார்பற்ற, தரவுகளை மையப்படுத்திய மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு எமக்குப் பெரிதும் உதவும்" என்றும் நம் பிக்கை வெளியிட்டிருக்கிறார்.

அதன்படி மேற்குறிப்பிட்டவாறு 9 மாகாணங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர் தல் கண்காணிப்பாளர்கள் பெருநகரங்கள் மாத்திரமன்றி சிறிய கிராமங்கள்தோறும் சென்று வாக்காளர்கள், தெரி வத்தாட்சி அலுவலர்கள், அரசியல்வாதிகள் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல்களை முன்னெடுப்பர். அதே போன்று பிராந்திய மட்டத்தில் தேர்தல் சார்ந்து இடம்பெறும் முகாமைத்துவம், தேர்தல் தின முன்தயாரிப்புக்கள், பிரசார நடவடிக்கைகள், தேர்தலுடன் தொடர்புபட்டதாக சிவில் சமூகங்கள் மற்றும் ஊடகங்களால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் நீண்டகாலக் கண்காணிப்பாளர்களால் விசேடமாகக் கண்காணிக்கப்படும். அதன்பிரகாரம் அவர்களால் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் கொழும்பைத் தளமாகக்கொண்டு மதிப்பீட்டுப்பணியில் ஈடுபடும் குழுவினருக்கு உதவியாக அமையும்.

அதேவேளை, மேலும் 32 பேர் அடங்கிய குறுங்காலக் கண்காணிப்பாளர் குழுவினர் தேர்தல் வாரத்தில் நாட்டை வந்தடையவிருப்பதுடன், அவர்கள் வாக்களிப்பு, வாக்கு எண்ணல் மற்றும் தேர்தல் பெறுபேறுகளை அறிவித்தல் ஆகிய செயன்முறைகளைக் கண்காணிப்பர்.

அதேபோன்று ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்புநாடுகள், நோர்வே, சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளின் நிபுணர்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பாளர்களை உள்ளடக்கிய இக்குழு இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தல் காலப்பகுதியில் சட்டக்கட்டமைப்பு மற்றும் அதன் அமுலாக்கம், தேர்தல் நிர்வாகத்தின் செயலாற்றுகை, அரச நிறுவனங்க ளின் வகிபாகம், வாக்காளர் பதிவு, பிரசார நடவடிக்கைகள் மற்றும் பிரசார நிதி, அடிப்படை சுதந்திரம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளின் உறுதிப்பாடு, பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் பங்கேற்பு, இணையவழி தகவல் மூலங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் பங்கு, வாக்களிப்பு, வாக்குகளை எண்ணுதல் மற்றும் அட்டவணைப்படுத்தல், முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீட்டு செயன்முறை, முடிவுகளை அறிவித்தல் உள்ளிட்ட ஒட்டுமொத்த அம்சங்களை யும் மதிப்பீடு செய்யும் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித் துள்ளது.

மேலும் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்புவிடுத்தமையானது இவ் விடயத்தில் இலங்கை கொண்டிருக்கும் அர்ப்பணிப்புடன் கூடிய கடப்பாட்டை வெளிக்காட்டுவதாகச் சுட்டிக்காட்டியுள்ள தலைமைக் கண்காணிப்பாளர் நச்சோ சன்செஸ் ஆமர், தாம் இலங்கையில் நடைபெறும் தேசிய தேர்தல்களைக் கண்காணிக்கும் 7 ஆவது சந்தர்ப்பம் இதுவாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தடை செய்யப்பட்ட பயணிகள் வந்த கப்பலில் திருப்பி அனுப்பப்பட்டனர்

(ந.லோகதயாளன்)

காங்கேசன்துறை – நாகபட்டினம் இடையே இடம் பெறும் பயணிகள் கப்பல் சேவையின் ஊடாக இரு நாட்டிலும் தடை செய்யப்பட்டவர்கள் பயணித்த சமயம் வழிமறிக்கப்பட்டு சொந்த நாடுகளிற்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இந்தியாவில் இருந்து நேற்று மதியம் காங்கேசன்துறை துறைமுகத்தை அடைந்த கப்பலில் இலங்கைக்குள் உள் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்ட இந்தியாவின் நாகைபட்டினத் தைச் சேர்ந்த இருவர் பயணித்தமையினால் இருவரும் அதே கப்பலில் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதேபோன்று இலங்கையின் மாத்தளையைச் சேர்ந்த ஒருவர் காங்கேசன்துறையில் இருந்து நாகபட்டினத்திற்குச் சென்றசமயம் அவரது பெயர் இந்தியாவில் கறுப்பு பட்டியலில் இணைக்கப்பட்டிருந்தமையினால் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் வகையில் நாகபட்டினம் துறைமுகத்திலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக முடியாமல் போன சஜித் பிரேமதாஸவை நாட்டின் ஜனாதிபதியாக்குவோம்

## தயாசிறி ஜயசேகர கூறுகின்றார்

“ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக சஜித் பிரேமதாஸவை நியமிக்க முற்பட்டபோது அதற்கு ரணில் விக்ரமசிங்க அன்று தடைகளை ஏற்படுத்தி அதனை தடுத்தார். ஆனால் எதிர்வரும் 21 ஆம் திகதி சஜித் பிரேமதாஸவை இந்த நாட்டின் ஜனாதிபதியாக்குவோம். அதனை அவரால் தடுக்க முடியாது.”

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

தங்கல்லையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளும்போது நூற்றுக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர். ஆனால் அவரின் பலவீனமான தலைமை காரணமாக படிப்படியாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவடைய ஆரம்பித்தது. கடந்த பொதுத் தேர்தலுடன் பூஞ்சியத்துக்கே ஐக்கிய தேசிய கட்சி சென்றது.

இந்த நிலை ஏற்படும் என்றே இற்றைக்கு பல வருடங்களுக்கு முன்னர் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக சஜித் பிரேமதாஸவை நியமித்துக்கொள்ள நான் கடும் முயற்சி எடுத்தேன். அதன் பலனாக நான் கட்சியில் இருந்து வெளியேற வேண்டி ஏற்பட்டது.

அதனால், அன்று சஜித் பிரேமதாஸவை ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக்க என்னால் முடியாவிட்டாலும், இந்த தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பெரும்பாலான ஆதரவாளர்களுடன் எதிர்வரும் 21ஆம் திகதி இந்த நாட்டின் ஜனாதிபதியாக்குவோம்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு தற்போது 76 வயது. இன்னும் 5 வருடங்களுக்கு அதிகாரத்தை கேட்கிறார். தற்போது அவர் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் போன்று. நடந்து செல்லும்போது சறுக்கி விழுகிறார்.

ஒரு தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டால் மீண்டும் 3தினங்களுக்கு பின்னலே அடுத்த கூட்டத்தில் கலந்துகொள்வார். அவரால் முடியாது. முன்னர் இருந்த பலமும் சக்தியும் தற்போது அவரிடம் இல்லை.



இந்த தேர்தலில் “இயலும் இலங்கை” என்ற தொனிப் பொருளில் ரணில் விக்கிரமசிங்க பிரசாரம் செய்து வருகிறார். இலங்கைக்கு முடியும் ஆனால் ரணிலால் முடியாது. அதனை அவர் நிரூப்பித்திருக்கிறார். 1994 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவத்தை அவர் ஏற்கும் போது கட்சியின் வாக்கு வங்கி நூற்றுக்கு 44 வீதமாகும். 94 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள்.

30 வருடங்களில் தொடர் தோல்வியால் இறுதியில் தேசிய பட்டியலில் ஓர் உறுப்பினர் கிடைத்தது. அதனையும் யாருக்கும் கொடுக்காமல் அவரே நாடாளுமன்றத்துக்கு வந்தார். ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை பதவியை அவர் ஒருபோதும் யாருக்கும் கொடுக்கமாட்டர்.

மேலும், வரிசை யுகத்தை இல்லாமலாக்கினார் என ரணில் விக்ரமசிங்க தெரிவித்து வருகிறார். ஆனால் இன்று கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ள பல நாள்களாக மக்கள் வரிசையில் இருக்கிறார்கள்.

இராணுவத்தினரும் பொலிஸாரும் தலையிட்டே அதனை தற்போது வழிநடத்தி வருகிறார்கள். ரணில் விக்கிரமசிங்க நாட்டை கட்டியெழுப்பி இருந்தால், இளைஞர், யுவதிகள் நாட்டைவிட்டுச் செல்ல ஏன் வரிசையில் இருக்க வேண்டும் என கேட்கிறேன்”– என்றார்.

# நாமல் ஆட்சிக்கு வருவது கனவிலும் கூட நடக்காது

## நிமல் லான்ஸா எம்.பி. தெரிவிப்பு



“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தைத் தீயிட்டு கொளுத்துவதற்கு இடமளிக்காமல் ஜனநாயகத்தை பாதுகாக்காமல் இருந்திருந்தால், நாடு பங்களாதேஷை விட கீழ் மட்டத்திற்கு வீழ்ந்திருக்கும். இலங்கையில் அவ்வாறான தொரு சூழல் ஏற்படக் காரணமானவர்கள் ராஜபக்ஷக்களே. எனவே நாமல் ஆட்சிக்கு வருவது கனவிலும் நடக்காது.”

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்ஸா தெரிவித்துள்ளார்.

திவுலப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த 102 பேர் ராஜபக்ஷக்களை விட்டு வெளியேறி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ளனர். 35 இற்கும் மேற்பட்ட கட்சிகள், அமைப்புகள் அவருக்கு ஆதரவாக வந்துள்ளன. 112 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர்.

கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஆட்சி கையளிக்கப்பட்ட போது ராஜபக்ஷ குடும்பமே அரசாங்கத்தில் அங்கத்துவம் வகித்தது. அதுவே அவர்களது தோல்விக்கும் வழி வகுத்தது.

எனவே பரீட்சித்துப் பார்ப்பதற்காக கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்ததைப் போன்ற தவறை ஜே.வி.பி.க்கு வாக்களிப்பதன் மூலம் மக்கள் செய்து விடக் கூடாது.

2022 இல் நாட்டில் நிலவிய அரசியல், பொருளாதார நெருக்கடிகளின் போது வன்முறைகள் தலைதூக்கின. அத்தியாவசிய பொருள்களுக்காக வரிசைகளில் காத்திருந்து மக்கள் மரணித்ததை மறக்க முடியாது. அவ்வாறானதொரு நிலைமை மீண்டும் ஏற்படுவதற்கு வாய்ப்பளித்து விடக் கூடாது. எனவே ரணில் விக்கிரமசிங்கவே மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட வேண்டும்.

ராஜபக்ஷ அரசாங்கம் எம்மை வீதியில் நடக்க முடியாத நிலைக்கு ஆளாக்கியது. இரண்டு வருடங்களுக்குள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை மாற்றியமைத்தார்.

முப்பது வருடங்களாக மக்களுடன் உழைத்து கட்டியெழுப்பிய அரசியல் அந்தஸ்தையும் ராஜபக்ஷக்கள் அழித்துவிட்டனர். நாமல் ராஜபக்ஷ ஆட்சிக்கு வருவது கனவில் கூட நடக்காது.”– என்றார்.

# இந்திய மீனவரிடம் கொள்ளையிடப்பட்ட பொருள்கள் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(ந.லோகதயாளன்)

இந்திய மீனவர்களிடம் கொள்ளையிடப்பட்டவை எனக் கருதப்படும் பொருளகளை பருத்தித்துறை மீனவர்கள் தமது உடைமையில் வைத்திருந்தனர் எனத் தெரிவித்து மீனவ சங்கத்தினர் அவற்றை பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்திய மீனவர்களிடம் நடுக் கடலில் வைத்து கொள்ளையிடப்பட்டவை எனக் கூறப்படும் பொருளகளை பருத்தித்துறையைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் தமது உடைமையில் வைத்திருந்தனர் எனத் தெரிவித்து மீனவ சங்கம் அவற்றை பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு இந்திய மீனவர்களிடம் கொள்ளையிடப்பட்ட பொருள்கள் அவை என உறுதி செய்வதில் உள்ள சட்ட நெருக்கடிகள் மற்றும் இவற்றை உடைமையில் வைத்திருந்த கொட்டடி மீனவர்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்திய மீனவர்களை நடுக்கடலில் தாக்கிப் பொருள்கள் கொள்ளையிடப்படுகின்றன எனத் தொடர்ச்சியாகக் குற்றச் சாட்டுகள் வெளிவருவதும் குறிப்பிடத்தக்கது.



# சட்ட விரோதமாக மண், மரங்கள் ஏற்றிய 25 டிப்பர்கள் ஒரே நாளில் மடக்கப்பட்டன









யாழ்ப்பாணம், கொடிகாமம், சாவச்சேரி பகுதிகளில் நடாத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 25 டிப்பர்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

அனுமதிப் பத்திரங்களின்றி மணலுடன் 24 டிப்பரும் அனுமதியின்றி மரக்குற்றிகளுடன் ஒரு டிப்பரும் என 25 டிப்பர்கள் கொடிகாமம், சாவகச்சேரி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டாரவின் பணிப்புரைக்கமைய சுற்றிவளைப்பு நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

கைப்பற்றப்பட்ட டிப்பர்களுடன் கைது செய்யப்பட்ட நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தி சட்ட நடவடிக்கை எடுக்கப் பொலிஸார் தயாராகியுள்ளனர்.

தொடர்ச்சியாக அனுமதியின்றி டிப்பரில் மண் அகழும் செயற்பாடு நடைபெற்றுவந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் 15 வேட்பாளர்கள் மாத்திரம் ஈடுபாடு

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்ற 38 வேட்பாளர்களில் 15 பேர் மாத்திரமே தேர்தல் பிரசார கூட்டங்களை நடத்தியுள்ளனர் என ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கண்காணிப்பு நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மூன்று வேட்பாளர்கள் தொடர்பில் எந்தவித தகவலும் வெளியாகவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கண்காணிப்பு நிறுவனம் முன்னெடுத்த ஆய்வொன்றில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அதன் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக கூறியுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் சின்னங்களை அறிவித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்ற 39 வேட்பாளர்களுக்கான சின்னங்கள் அந்த வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளன.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சித்தார்த்தன், விக்னேஸ்வரன், மாவை சேனாதிராசா ஆகியோர் யாழ்ப்பாணத்தில் இருந்தனர். சிறிதரன் நேற்று மாலை சந்திப்பில் பங்குபற்றினார். ஆயினும் சந்திப்பு சற்று நேரம் தாமதமானமையால், முழு நேரமும் அவர் இருக்கவில்லை. ஆரம்பத்தில் ஒரு பத்து, பதினைந்து நிமிடங்கள் இருந்து விட்டுத் தமது லண்டன் பயணத்துக்கு நேரமாகிவிட்டது என தெரிவித்து, கொழும்பு இந்திய ஹவுஸில் இருந்து நேரடியாக விமான நிலையத்துக்குப் புறப்பட்டு விட்டார்.

புறப்பட முன்னர் தமது பக்கக் கருத்தை சுருக்கமாக கூறினார் என்று தெரிகிறது. இனப்பிரச்சினைக்கு தீர்வு காண பல வழிகளிலும் முயன்று, அவை பலனளிக்காத நிலையில் மனவிரக்தியோடு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தினோம் என்று அவர் கூறிவிட்டு புறப்பட்டார். அவரது கருத்தை அஜித் டோவால் சிரித்துக் கொண்டு செவிமடுத்தார்.

அவரைத் தவிர சுமந்திரன், செல்வராஜா கஜேந்திரன், செல்வம் ஆகிய மூவரும் மட்டுமே சந்திப்பில் பங்கு பற்றினர். அவர்கள் தொடர்ந்து சுமார் 40 நிமிட நேரம் தேசிய பாதுகாப்பு ஆலோசகருடனும் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுடனும் உரையாடினர்.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் யாராயினும் தங்கள் விஞ்ஞாபனத்தில் சமஷ்டித் தீர்வை முன்வைக்கத் தயார் என்று பகிரங்கமாக அறிவித்தால் மட்டுமே அவருக்கு வாக்களிப்பது குறித்து பரிசீலிப்போம், இல்லையேல் பகிஷ்கரிப்புத்தான் என்று கஜேந்திரன் கூறி மையையும் அஜித் டோவால் சிரித்துக்கொண்டே செவிமடுத்தார்.

செல்வம் அடைக்கலநாதன் தம்பாட்டுக்கு மீனவர் பிரச்சனை குறித்து எடுத்துரைத்தார். ஆனால் பொது வேட்பாளர் குறித்து அவர் மூச்சு விடவே இல்லை.

சுமந்திரன் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக மூன்று பிரதான வேட்பாளர்களின் நிலைப்பாடுகளையும் தமிழரசு பரிசீலிக்கின்றமையையும், பொருத்தமான ஒரு வேட்பாளரை ஆதரித்து, தமது கட்சி தமிழ் மக்களிடம் கருத்தை முன்வைக்கும் எனவும் விளக்கினார். பொது வேட்பாளராக இறங்க முன்வந்துள்ள தமது கட்சி உறுப்பினரிடம் கட்சி விளக்கம் கேட்டு, ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றமையையும் அவர் விவரித்தார். அவற்றை அஜித் டோவால் சிலாகித்து வரவேற்றார் என்று தெரிகிறது.

பதிலுக்கு அஜித் டோவால் என்ன சொன்னார் என்று சந்தித்த தரப்புக்களிடம் கேட்டேன். சிறிதரன் எம்.பி. லண்டன் புறப்பட்டு விட்டமையால் அவரின் கருத்தை, பெற முயற்சிக்கவில்லை. அத்தோடு அஜித் டோவால் பதிலளித்துப் கருத்து கூறும் போது சிறிதரன் கூட்டத்தில் இல்லை. சிறிதரனுக்குத் தாம் கருத்து கூறிய போது சிரித்துக் கொண்டு செவிமடுத்த அஜித் டோவாலின் நிலைப்பாடுதான் சந்திப்பின் பெறுபேறாக மனதில் பதிந்திருக்கக் கூடும்.

ஆனால், சந்திப்பிலிருந்த மற்றைய மூன்று தமிழ் எம்.பிக்கள் பக்கத்திலிருந்தும் அவர்கள் அஜித் டோவாலுக்கு தெரியப்படுத்திய கருத்துத்தான் வெளிவந்தது. அஜித் டோவால் சொன்ன பதில் மூவர் தரப்பிலும் இருந்தும் வெளிவரவில்லை. டோவலின் நிலைப்பாட்டை வெளியிட தரப்புகள் தயங்கியமையில் இருந்து நிலைமையை நான் புரிந்து கொண்டேன்.

இப்போது ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட சொல்லாடலை ஒரு தடவை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். 'அஜித் டோவால் அரசியல்வாதியும் அல்லர். இராஜதந்திரியும் அல்லர். அரசியல்வாதிக்கும் இராஜதந்திரிக்கும் அதிகாரிக்கும் இடையில் உயர் பாதுகாப்பு தரநிலையை சேர்ந்தவர் அவர்.'

பாதுகாப்பு தரப்பினரின் கூட்டங்களில் வார்த்தை ஜாலங்கள் – சொல்லாடல்கள் – எப்படி இருக்கும் என்பது நமக்குப் பொதுவாகத் தெரிந்ததுதான். ஊகிக்கத்தக்கதுதான்.

மாலைதீவு, வங்காளதேசம் போன்றவை கைநழுவிப்போன சீற்றத்தில் இருக்கும் புதுடில்லியின் உயர்தர அரச வர்க்கத்துக்கு, அதே போக்கு இங்கும் ஏற்பட வெற்றிலை வைக்கும் நம்மவர்களின் நடத்தை – அவர்களைப் பொறுத்தவரை பொறுப்பற்ற செயற்பாடு – அவர்களுக்கு எத்துணை எரிச்சலைத் தந்திருக்கும் என்பதை உய்த்துணர்ந்தால் நேற்றைய அவரின் அணுகுமுறை எப்படி இருக்கும் என்பதை ஊகிப்பது கஷ்டமாக இருக்காது.

நேற்றைய சந்திப்பில் கலந்து கொண்டவர்கள், இந்திய உயர் வர்க்கத்தின் பிரதிபலிப்பை தற்காலிகமாக மூடி மறைத்தாலும் வரும் நாள்களில் விவகாரம் விலாவாரியாக கசியும் என்று நம்பலாம். அப்போது விவரங்களை பார்த்துக் கொள்வோம்.

\+ + +

நேற்று மருத்துவர்கள் பற்றிய ஒரு சர்ச்சையைக் கிளறி இருந்தேன். மருத்துவத் துறையினரிடம் இருந்து ஒரு விளக்கம் – வியாக்கியானம் – வந்துள்ளது. அது வாசகர்களுடன் பகிரப்பட வேண்டியதுதான். அதனை நாளை பார்ப்போமா?

## தமிழரின் வாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதனையும் கூறப்போவதில்லை எனவும், இருப்பினும் அனைவரும் ஒற்றுமையாக ஒருமித்து நின்று, தமிழ் மக்களின் வாக்குகளை உபயோகமான முறையில் பயன்படுத்துவதே சிறந்த தீர்மானமாக அமையும் என்று தான் கருதுவதாகவும் தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகை தந்திருக்கும் இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுக்கும் தமிழ்த் தேசியஅரசியல்கட்சிகளின்பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பிலுள்ள இந்தியன் இல்லத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் கலந்துகொள்வதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கும், ரெலோவின் சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனுக்கும், புளொட் சார்பில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் அதன் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரனுக்கும் அழைப்புவிடுக்கப்பட்டிருந்தது.

அதன்படி சந்திப்பில் சிறீதரன், சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் கஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்த போதிலும், வெளிநாட்டுப் பயணமொன்றுக்குச் செல்ல வேண்டியிருந்ததன் காரணமாக, சந்திப்பின் தொடக்கத்திலேயே சிறிதரன் வெளியேறினார்.

அதற்கமைய இந்தச் சந்திப்பில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் ஜனாதிபதித் தேர்தல் நிலைவரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது கடந்த 75 வருடகால அனுபவத்தில் தமிழ் மக்களால் ஒற்றையாட்சியின் கீழ் வாழ முடியாது என்பதைத் தாம் புரிந்துகொண்டிருப்பதாகவும், அதேபோன்று அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாகத் தோல்வியடைந்திருப்பதன் காரணமாக அதனூடாக தமிழ் மக்களால் முன்நோக்கிச் செல்ல முடியாது எனவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் கஜேந்திரன் எம்.பி., அஜித் டோவலிடம் எடுத்துரைத்தார்.

ஆகவே 13 ஆவது திருத்தத்தையும், 2015 ஆம் ஆண்டு ஒற்றையாட்சி முறைமையை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட புதிய அரசமைப்பு வரைபையும் தாம் நிராகரிப்பதாகத் தெரிவித்த கஜேந்திரன் எம்.பி., வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமையுடன்கூடிய சமஷ்டி முறைமையை வென்றெடுப்பதற்கு இந்தியா உதவ வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

அதேபோன்று எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கை குறித்தும், தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்கான தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் தீர்மானம் குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன.

இத்தகைய மாறுபட்ட நிலைப்பாடுகள் தொடர்பிலும், தமிழ் மக்களின் வாக்கு வீதம் குறித்தும் கேட்டறிந்த அஜித் டோவல், இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் அனைவரும் ஒற்றுமையாக ஒருமித்து நின்று, தமிழ் மக்களின் வாக்குகளை உபயோகமான முறையில் பயன்படுத்துவதே சிறந்தது என்று ஆலோசனை வழங்கினார்.

அத்தோடு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் எத்தகைய தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என்று தான் கூறப்போவதில்லை என்று குறிப்பிட்ட அவர், இருப்பினும் இத்தகைய தேர்தலில் அளிக்கப்படும் வாக்குகள் ஜனநாயகத்தில் எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பது குறித்து சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

# சஜித்தும் அநுரவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சஜித்தும் அநுரவும் அமுல்படுத்தத் தயாராகி வருகின்றனர் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி முறையான திட்டமின்றி முன்னெடுத்த வரிகளை குறைப்பு தீர்மானத்தால் 2022 இல் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததை எவரும் மறந்துவிடக்கூடாது எனவும் ரணில் தெரிவித்தார்.




முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டத்தை அமுல்படுத்த சஜித்தையும் அநுரவும் ஏன் போராட்டங்களை நடத்தி அவரை வீட்டுக்கு அனுப்பினார்கள் என்று ரணில் கேள்வி எழுப்பினார்.

கடந்த இரண்டு வருட காலத்தில் சிரமப்பட்டு முன்னெடுத்துச் சென்ற பொருளாதாரத்தைப் பாதுகாத்து, மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய ஒரு நாட்டை உருவாக்கவே இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடுகின்றார் என்றும் ரணில் தெரிவித்தார்.

மொனராகலையில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் நடைபெற்ற ‘இயலும் ஸ்ரீலங்கா’ வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ரணில் இதனைக் குறிப்பிட்டார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

“இன்று ஒரே கூட்டத்துக்காக கூடியிருக்கும் மக்கள் கடந்த காலங்களில் ஒவ்வொரு குழுக்களுக்கு ஆதரவளித்தனர். இன்று அனைவரும் ஒரு மேடையில் இருக்கின்றனர். இவர்கள் எவரும் கட்சி மாறவில்லை. ஆனால், 2022 ஆம் ஆண்டில் அனைவரும் வாழ்க்கைச் சவால்களை எதிர்கொண்டோம். எந்தவொரு கட்சியினருக்கும் அந்த கஷ்டங்கள் வெவ்வேறாக இருக்கவில்லை. அனைத்து கட்சியினரும் வரிசையில் அவதிப்பட்டனர். அதனாலேயே இன்று அனைவரும் இந்த மேடையில் உள்ளனர்.

சிலர் வருமானத்தை இழந்து தவித்தனர். நாம் நாட்டைக் காப்பாற்ற ஒற்றுமையாக பயணிக்க வேண்டியது அவசியமாகும். அதற்காகவே அரசும் ஒற்றுமையாக பயணித்தது. நாட்டை மீட்பதற்காக நாங்கள் ஒன்றுபட்டோம்.

நெருக்கடி காலத்தில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 15 சதவீதமாகக் குறைந்து போனது. உற்பத்தியை அதிகரிக்க வேண்டியிருந்தது. கிரீஸ் இவ்வாறுதான் சரிவை கண்டது. இலங்கைக்கும் அந்த நிலை ஏற்பட இடமளிக்காமல் நான் அமெரிக்கா, உலக வங்கியுடன் பேசி உரத்தைப் பெற்றுக்கொண்டு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் சிறுபோகத்துக்கு உரம் பெற்றுக்கொடுத்தோம். 2023 இல் பெரும்போகத்துக்கு உரம் கொடுத்தோம். 4 போகங்கள் சாத்தியமாக நடந்தன.

அதேபோல் பழங்கள், மரக்கறி விளைச்சலும் கிடைத்தது. அதன் பலனாக மொத்த தேசிய உற்பத்தி அதிகரித்தது. தொழிற்சாலைகள் முடங்கி கிடந்த வேளையில் விவசாயத்தை மேம்படுத்த முடிந்தது. நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைத்தன்மையை பாதுகாக்கவே ஜனாதிபதித் தேர்தலை நடத்துகின்றோம். உரிய தீர்மானத்தை மக்கள் எடுக்க வேண்டும்.

ஜே.வி.பி.யிடமோ ஐக்கிய மக்கள் சக்தியிடமோ நாட்டின் முன்றேற்றத்துக்கான திட்டம் இல்லை. அதனால் வாழ்க்கைச் செலவைக் குறைக்க வரியைக் குறைப்போம் என்கின்றனர். அப்படிச் செய்தால் அரசாங்க வருமானம் குறையும். அவ்வாறு செய்துவிட்டு பழைய நிலைக்கே திரும்பிச் செல்ல வேண்டியிருக்கும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவும் அதனையே செய்தார். சஜித்தும் அநுரவும் அதனையே செய்யப்போதாகச் சொல்கின்றார்கள். அப்படியாயின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டியடித்தது அர்த்தமற்றதாகிவிடும்.

எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டில் பொருளாதாரம் வலுவடைந்ததால் மக்களுக்கு ஓரளவு சலுகை வழங்கினோம். அதனால் அரச ஊழியர்களுக்கு 10 சம்பள அதிகரிப்பை இரண்டு கட்டங்களின் கீழ் வழங்கினோம். உதய செனவிரத்ன அறிக்கையின் பிரகாரம் அடுத்த ஆண்டிலும் சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது.

நிதி இருப்பதால் அதனை செய்கிறோம். வறுமையான மக்களுக்கும் நாம் சலுகை வழங்குகிறோம். பொய் வாக்குறுதிகளை நான் ஒருபோதும் சொல்லமாட்டேன். நாட்டில் வளர்ச்சி ஏற்படும்போது சம்பளம் அதிகரிக்கும். பொருட்களின் விலையும் குறையும். 2025 - 2026 எவ்வாறு சலுகை கிடைக்கும் என்பதை பொறுத்திருந்து பாருங்கள். 2026 இறுதி காலாண்டில் சலுகைகள் அதிகளவில் கிடைக்கும்.

அரச ஊழியர்கள் பல நெருக்கடிக்கு முகம்கொடுத்தனர். இன்று ஓரளவு மொத்த தேசிய உற்பத்தி அதிகரிக்கிறது. 2022 - 2023 கஷ்டங்களை முடிவுக்கு கொண்டு வந்துள்ளோம். இனி இளையோருக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குவோம். சுய தொழில் பயிற்சியை பெறவும் நிதிச் சலுகை வழங்குவோம். பொருளாதார மேம்பாட்டை உருவாக்கவும் வழி செய்வோம். இந்த அரசில் தீர்க்க முடியாமல் போன பிரச்சினைகளுக்கு அடுத்த முறை விரைவில் தீர்வு தருவோம்.

குளங்களை மறுசீரமைத்து காணிகளைப் பகிர்ந்தளித்து நாம் விவசாயத்தைப் பலப்படுத்துவோம். உமா ஓயா வேலைத் திட்டத்தை நிறைவு செய்ய வேண்டியுள்ளது. 5 வருடங்கள் இப்பகுதி மக்களுக்கு வசதிகளை தந்து அவகாசம் தருகின்றேன். நீங்கள் விளைச்சலை அதிகரிக்க வேண்டும்.

நாட்டை முன்நோக்கி நகர்த்த எதிர்வரும் செப்டெம்பர் 21 சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது தண்ணீரும் இருக்காது.” - என்றார்.

# புதிய நாடாளுமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான ஐந்து வருடங்கள்” என்ற தொனிப்பொருளில் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று வியாழக்கிழமை கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் வெளியிடப்பட்டுள்ளது. அதில் “இலங்கையை வெற்றியடையச் செய்வோம்“ என்ற உப தலைப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாது:-

“நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதா? இல்லையா? என்ற தீர்மானம் புதிய நாடாளுமன்றத்தால் எடுக்கப்படும்.

புதிய தேர்தல் முறையை அறிமுகம் செய்யும் பணியும் புதிய நாடாளுமன்றத்தால் முன்னெடுக்கப்படும்.

சட்டவாக்கப் பேரவையின் அறிக்கைக்கு அமைய மாகாண சபை பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக இரண்டாவது மந்திரி சபை நிறுவப்படும்.

மாகாண சபைகளுக்கு அரசமைப்பு மற்றும் சட்டங்களால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்யும் அதிகாரம் இந்த மந்திரி சபைக்கு வழங்கப்படும்.” - என்றுள்ளது.






# இந்தியப் பாதுகாப்பு ஆலோசகரை சந்தித்த மலையகப் பிரதிநிதிகள்

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுக்கும் மலையகத் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று வியாழக்கிழமை கொழும்பில் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன், கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்குமார், தொழில் இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவருமான வடிவேல் சுரேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்தல் மற்றும் சமூக, பொருளாதார விடயங்களை மேம்படுத்தல் குறித்து கலந்துரையாடப்பட்டன.

சந்திப்பின் நிறைவில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமானால் நினைவுச் சின்னம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என கண்டறிய சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்

## செஞ்சிலுவை சர்வதேசக்குழு வலியுறுத்தல்

"இலங்கையில் சகல சமூகங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காணாமல்போன தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்து கொள்வதற்காக நீண்டகாலமாகக் காத்திருக்கின்றார்கள். அவர்கள் கௌரவத்துடன் வாழ்வதற்கு இடமளிக்கும் அதே வேளை, அவர்களது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது எனும் உண்மையைக் கண்டறிவதற்குரிய சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும்." – என்று செஞ்சிலுவை சர்வதேசக்குழு வலியுறுத்தியுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை (ஆகஸ்ட் 30) வலிந்து காணாமல் ஆக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், அதனை முன்னிட்டு செஞ்சிலுவை சர்வதேசக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"உலகளாவிய ரீதியில் யுத்தம், வன்முறைகள், அனர்த்தங்கள், மனிதாபிமான நெருக்கடிகள் மற்றும் புலம்பெயர்வு போன்ற பல்வேறு காரணிகளால் தமது குடும்பத்தினரை, அன்புக்குரியவர்களை பிரிந்த சகலரையும் நாம் இன்றைய தினத்தில் நினைவுகூருகின்றோம்.

2023 ஆம் ஆண்டின் இறுதியில் உலகளாவிய ரீதியில் 2 இலட்சத்து 39 ஆயிரத்து 700 இற்கும் மேற்பட்டோர் காணாமல்போயிருக்கின்றனர் என்று செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச்சங்கக் கூட்டிணைவில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள். இருப்பினும் இந்த எண்ணிக்கை காணாமல் ஆக்கப்படல்களின் உண்மை நிலைவரத்தையும், தீவிரத் தன்மையையும் துல்லியமாகப் புலப்படுத்தவில்லை.

ஒவ்வொரு வலிந்து காணாமல் ஆக்கப்படல் சம்பவத்தின் பின்னாலும் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என அறிந்துகொள்ள முடியாததனால் உறவுகளுக்கு ஏற்படும் அளவற்ற துயரம் மறைந்திருக்கின்றது.

வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டோர்விவகாரத்தைப்பொறுத்த மட்டில், இத்தகையதோர் பிரச்சினை உண்டு என்பதை ஏற்றுக் கொள்வதும், அதற்குரிய தீர்வை வழங்குவதும் நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு இன்றியமையாததாகும். மாறாக இப்போதும் தமது அன்புக்குரியவர்களைத் தேடிக்கொண்டிருக்கும் சகல சமூகத்தைச் சேர்ந்தவர்களினதும் துன்பியல் அனுபவங்களுக்குரிய அங்கீகாரத்தை வழங்க மறுப்பதானது அவர்கள் மத்தியில் அதீத கோபம் தூண்டப்படுவதற்கும், நல்லிணக்க செயன்முறையில் பின்னடைவு ஏற்படுவதற்குமே வழிகோலும்.

எனவே, இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாவிடின், தனிநபர்களால் மாத்திரமன்றி ஒட்டுமொத்த சமூகத்தாலும் முன்நோக்கிப் பயணிக்க முடியாது.

இலங்கையில் சகல சமூகங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காணாமல்போன தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள்வதற்காக நீண்டகாலமாகக் காத்திருக்கின்றார்கள். அவர்கள் கௌரவத்துடன் வாழ்வதற்கு இடமளிக்கும் அதேவேளை, அவர்களது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது எனும் உண்மையைக் கண்டறிவதற்குரிய சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்." – என்றுள்ளது.

# வவுனியாவில் குடும்பப் பெண்ணை கடத்ததிய 4 பேர் வானுடன் கைது



**(கே.வசந்தன்)**

வவுனியாவில் இருந்து குடும்ப பெண் ஒருவர் கடத்தப்பட்ட நிலையில் அவர் மீட்கப்பட்டமையுடன் வானுடன் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கொக்குவெளி, அரசடி வீதியில் வசித்து வந்த குடும்ப பெண் ஒருவரை யாழ்ப்பாணத்தில் இருந்து வான் ஒன்றில் வந்த குழுவினர் கடத்திச் சென்றுள்ளனர். வீட்டில் இருந்த பெண்ணின் மாமியார் பெண்ணை தூக்கிச் சென்றவர்களை விரட்டிய போது அவரை உதைந்து விட்டு சென்றுள்ளனர்.

இதன்பின் மாமியார் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்பொ பிரிவு பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஹேமந்த தலைமையில் சப் இன்ஸ்பெக்டர் அகமட், பொலிஸ் சார்ஜன்ட் திலீபன் (61461), பொலிஸ் கொன்தாபிள்களான தயாளன் (91792), ரணில் (81010) கால்கே (9200) உள்ளடங்கிய பொலிஸ் குழுவினர் விரைந்து செயற்பட்டனர். பொலிஸார் அந்த வாகனம் சென்ற பாதையைப் பின் தொடாந்து சென்று வாகனத்தை பளைப் பகுதியில் வைத்து மடக்கிப் பிடித்துள்ளதனர்.அந்தப் பெண்ணையும் மீட்டுள்ளனர்.

இதன்போது கடத்தலுக்கு பயன்படுத்த வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. நான்கு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். மணியந்தோட்டம், இருபாலை, சுன்னாகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நான்கு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் நான்கு பேரையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# ‘கிளப் வசந்த’ கொலை: மேலும் இருவர் கைது!



“கிளப் வசந்த” என அழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேராவின் கொலைச் சம்பவம் தொடர்பில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி மற்றும் சந்தேகநபர்கள் பயணித்த காரை செலுத்திய சாரதி என சந்தேகிக்கப்படும் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

32 மற்றும் 29 வயதான இரண்டு சந்தேகநபர்களும் பாணந்துறை பின்வத்த பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

“கிளப் வசந்த” கொலை தொடர்பில் பிரதான சந்தேகபர் உள்ளிட்ட மூவர் கடந்த 23 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மூவரும் 90 நாள்களுக்கு தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த ஜுலை 8 ஆம் திகதி அத்துருகிரியவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் “கிளப் வசந்த” உள்ளிட்ட இருவர் கொலை செய்யப்பட்டனர்.




நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணில் - சஜித் - அநுர முத்தரப்பு நிலைப்பாடு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மூன்று பிரதான வேட்பாளர்களினதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவந்துவிட்டன.

தமிழர்களைப் பொறுத்தவரை - தமிழர் தேசத்தைப் பொறுத்தவரை - எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினதும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர குமார திஸநாயக்காவினதும் தேர்தல் விஞ்ஞாபனங்களில் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான விடயங்களில் சில முன்னேற்றகரமான அம்சங்கள் இருக்கின்றமை அவதானிக்கத்தக்கது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மைக்காலத்தில் தாம் பாடிய பழைய பல்லவியையே அபஸ்வரமாக இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் எதிரொலித்திருக்கின்றார்.

சஜித் - அநுர இருவருமே தேசிய இனப் பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் வரை தற்போதைய அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் உள்ளவை முழுமையாக நடைமுறையாக்கம் செய்யப்படும் என்று உறுதி அளித்திருக்கிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவோ 13ஆம் திருத்தத்தில் உள்ள பொலிஸ் அதிகாரப் பரவலாக்கல் குறித்து இனி வரப் போகும் புதிய நாடாளுமன்றத்தில் பேசி முடிவெடுக்கலாம் என்கிறார்.

அதாவது, சஜித்தும் அநுரவும் '13' குறித்துப் பேச, ரணில் விக்கிரமசிங்கவோ '13 மைனஸ்' குறித்துப் பிரஸ்தாபிக்கின்றார்.

2015 முதல் 2019 வரையான காலத்தில், தமிழர் தரப்பின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியை, விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து மேற்கொண்டு, விரைந்து பூர்த்தி செய்வது குறித்து அநுர குமார திஸநாயக்காவின் தேர்தல் விஞ்ஞாபனம் வலியுறுத்துகின்றது.

நிறைவேற்றதிகார முறைமையை ஒழித்து, நாடாளுமன்றத்திற்குப் பதில் கூறக்கூடிய நாடாளுமன்ற ஆட்சி முறைமை குறித்துக் குறிப்பிடும் சஜித் பிரேமதாஸ அதில் பதிமூன்றாவது திருத்தத்தின் அடிப்படையிலான உச்ச அதிகாரப் பகிர்வு இருக்கும் என்று நம்பிக்கை ஊட்டுகின்றார்.

2015 முதல் 2019 வரையான தமது ஆட்சி காலத்தில் தாம் பிரதமராக இருந்து கொண்டு, புதிய அரசமைப்பை உருவாக்க முழு மூச்சாக முயல்பவர் போல் காட்டிக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க, இப்போது புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியை புதிய நாடாளுமன்றத்திடம் கையளிப்பேன் என்ற பேச்சோடு நழுவுகின்றார்.

2002இல் விடுதலைப் புலிகளுடன் தமது அரசு நடத்திய பேச்சில் வடக்கு - கிழக்குக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வழங்க சர்வதேச மட்டத்தில் இணங்கி வந்த ரணில் விக்கிரமசிங்க, இப்போது புலிகள் இல்லை என்றதும் சமஷ்டியை மறந்து விட்டார்.

ஆனால் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மத்தியினால் மீளப் பெறப்படும் முறைமை இருக்காது என்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் சமஷ்டிக் கோட்பாட்டுக்கு சஜித் இணங்குகின்றார்.

2015 - 2019 இடையில் முன்னெடுக்கப்பட்ட அரசமைப்பு உருவாக்கத்தை தொடர இணங்கியதன் மூலம், ஒற்றை ஆட்சிக்கு வெளியே வந்து 'எக்கிய ராஜ்ஜிய'க் கோட்பாட்டுக்குள் செயல்படுவதற்கு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸநாயக்கா முன்வந்திருக்கின்றார். இவை தென்னிலங்கையின்மூளைமையத்தில் - ஆன்மாவில் - ஏற்பட்ட ஒரு பெரிய மாற்றமாகக் கருத முடியும்.

சஜித்தும் அநுரவும் இப்படி சற்று தமிழர் சார்பு கருத்துக்களை உள்வாங்கும் நிலையில் பயணிக்க, ரணில் மட்டும் பௌத்த - சிங்களத் தீவிரவாதப் போக்குடையோரோடு சேர்ந்து நழுவப் பார்க்கின்றார்.

# இந்தியாவில் வேகமாக பரவும் வைரஸ்: 20 ஆண்டுகளில் இல்லாத அளவு பாதிப்பு

இந்தியாவில் சண்டிபுரா எனும் வைரஸ் பாதிப்பு கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிக வேகமாகப் பரவி வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் முதல் ஓகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில் மாத்திரம் இந்தியாவில் 245 பேருக்கு அக்யூட் என்செபாலிடிஸ் சிண்ட்ரோம் எனும் மூளையழற்சி நோய்ப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இதில் 82 பேர் உயிரிழந்தனர் என இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா முழுக்க 43 மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு அக்யூட் என்செபாலிடிஸ் சிண்ட்ரோம் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதில் 64 பேருக்கு சண்டிபுரா வைரஸ் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறையின் அறிக்கையை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

“சண்டிபுரா வைரஸ் தொற்று இந்தியாவில் அழிந்து போகும் தறுவாயில் உள்ளது. எனினும், தற்போது ஏற்பட்டுள்ள பாதிப்பு கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது,“ என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

குஜராத்தில் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் ஒருமுறை



சண்டிபுரா வைரஸ் தொற்று ஏற்பட்டு வருகிறது. நுளம்புகள், பூச்சி வகைகளால் சண்டிபுரா வைரஸ் பரவுகிறது.

இந்த நோய்ப் பாதிப்புக்கு குறிப்பிட்ட சிகிச்சை முறை மற்றும் தடுப்பு மருந்து என எதுவும் இல்லை.

பாதிப்பு ஏற்பட்டதும் அதனை எவ்வளவு சீக்கிரம் கண்டுபிடிக்கின்றோமோ அதற்கு ஏற்ப நோய்ப் பாதிப்பை குணப்படுத்தும் வாய்ப்புகள் அதிகரிக்கும்.

அதிக பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்துவது மற்றும் 15 வயதிற்கும் கீழ் உள்ள சிறுவர்களைக் கண்காணிப்பது அவசியம் ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆதார் அட்டை இருந்தால் மட்டுமே திருப்பதி ஏழுமலையான் பிரசாதம்

இந்தியாவில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களில் திருப்பதி ஏழுமலையான் ஆலயமும் ஒன்றாகும்.


பக்தர்கள் அதிகளவில் செல்லும் இந்த ஆலயத்தில் பிரசாதம் பெற்றுக்கொள்ளும் பக்தர்களுக்கு புதிய நிபந்தனை ஒன்று விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பிரசாதம் பெற்றுக்கொள்ளும் பக்தர்கள் ஆதார் அட்டையைக் காண்பித்து உறுதிப்படுத்திய பின்னரே அவர்களுக்குப் பிரசாதம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இடைத்தரகர்கள் மூலம் லட்டுகள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# பிரதமர் மோடி சிங்கப்பூர் விஜயம் செய்யத் திட்டம்





தென்கிழக்கு ஆசிய நாடுகளுடனான இந்தியாவின் தொடர் உறவைப் பிரதிபலிக்கும் வகையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சிங்கப்பூர் பயணத்திற்குத் தயாராகி வருகின்றார் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி செப்டம்பர் முதல் வாரத்தில் பிரதமர் மோடி சிங்கப்பூர் மற்றும் புருனே ஆகிய நாடுகளுக்குச் செல்லவுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

13 ஆவது கிழக்கு ஆசிய உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக இருதரப்பு பயணமாக பிரதமர் மோடி கடந்த 2018 இல் சிங்கப்பூர் சென்றார்.

இந்தியப் பிரதமரின் வருகைக்கு முன்னதாக சிங்கப்பூரில் கடந்த திங்கள் கிழமை இந்தியா – சிங்கப்பூர் அமைச்சர்கள் வட்ட மேசை மாநாட்டை இரண்டாவது தடவையாக நடத்தியது.

இதில் பல இந்திய மற்றும் சிங்கப்பூர் அமைச்சர்கள் பங்கேற்றுள்ளனர். இதில் இந்திய தரப்பிலிருந்து நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், வர்த்தகத்துறை அமைச்சர் பியூஷ் கோயல், தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிங்கப்பூர் தரப்பில் துணைப் பிரதமர் கன் கிம் யோங், வெளியுறவுத்துறை டாக்டர் விவியன் பாலகிருஷ்ணன், உள்துறை மற்றும் சட்ட அமைச்சர் கே. சண்முகம், டிஜிட்டல் வளர்ச்சி மற்றும் தகவல் அமைச்சர் ஜோசபின் தியோ, மனித வள அமைச்சர் டாக்டர் டான் சீ லெங் மற்றும் போக்குவரத்து அமைச்சர் சீ ஹாங் டாட் ஆகியோர் அடங்குவர்.



# குஜராத்தில் வெள்ளம் 28 பேர் உயிரிழப்பு

குஜராத்தில் ஏற்பட்டுள்ள மழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக இதுவரை 28 பேர் பலியாகியுள்ளனர்.

கடும் மழைக் காரணமாக 30,000 இற்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பலர் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழைக் காரணமாகப் பல கங்கைகள் மற்றும் நீர்நிலைகள் பெருக்கெடுக்கும் நிலையை எட்டியுள்ளன என இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா குஜராத் மாநிலத்தில் கடந்த சில நாள்களாகக் கனமழை பெய்து வருகிறது.

இந்த நிலையில், குஜராத் மாநிலத்தில் ஆழ்ந்த காற்றமுத்தம் ஏற்பட்டுள்ளதாக இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.













# ட்ரம்ப் மீதான கொலை முயற்சியில் வெளிநாட்டுச் சதி எதுவும் இல்லை

## அமெரிக்க பொலிஸார் அறிக்கை

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியான டொனால்ட் ட்ரம்பை இலக்கு வைத்து அண்மையில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.


இந்த சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில், அந்நாட்டுக் பொலிஸார் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இதன்படி குறித்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் வெளிநாட்டுச் சதிகள் எதுவும் இல்லை எனவும், துப்பாக்கிச் சூட்டை நடத்திய தோமஸ் க்ரூக்ஸ் என்பவர் தனித்துச் செயற்பட்டுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

துப்பாக்கிதாரியான தோமஸ் க்ரூக்ஸ் துப்பாக்கிச் சூட்டின் போது சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகில் மிகவும் பிரபலமான 10 சமூக வலைத்தளங்கள்

## தரப்படுத்தல் வெளியானது




மிகவும் பிரபலமான 10 சமூக வலைத் தளங்களின் பட்டியல் வெளியானது.

உலக மக்கள் தொகையில் அதிகமானவர்கள் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர்.

DataReportal இன் சமீபத்திய தரவுகளின் படி உலகளாவிய பயனர்களின் மொத்த எண்ணிக்கை 5.35 பில்லியனாக உள்ளது.

கூடுதலாக 2023ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து புதிதாக 97 மில்லியன் பயனர்கள் இணையத்தைப் பயன்படுத்தத் தொடங்கியதன் காரணமாக இணையப் பயனர்களின் எண்ணிக்கை 1.8 சதவீதம் உயர்ந்துள்ளது.

இந்த நிலையில் உலகளவில் அதிய பயனர்கள் பயன்படுத்தும் சமூக வலைத்தளமாக முகப்புத்தகம் தொடர்ந்து முதலிடத்திலுள்ளதாக DataReportal இன் சமீபத்திய தரவுகளில் தெரியவந்துள்ளது.



# காரை விழுங்கிய குழி

தென்கொரியா தலைநகர் சியோல் பகுதியில் வீதியொன்றில் காணப்பட்ட குழிக்குள் கார் ஒன்று விழுந்ததில் இருவர் காயமடைந்துள்ளனர்.

70 வயதுடைய பெண்ணொருவரும் 80 வயதுடைய ஆணொருவருமே இந்த விபத்தில் காயமடைந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதனால், அந்தப் பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தக் குழி எவ்வாறு ஏற்பட்டது என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# டெலிகிராம் நிறுவனர் பிணையில் விடுதலை

பிரான்ஸில் கைது செய்யப்பட்ட டெலிகிராம் செயலியின் நிறுவனரும் தலைமை செயல் அதிகாரியுமான பாவெல் துரோவ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாவெல் துரோவை, பிரான்சில் உள்ள போர்கேட் விமான நிலையத்தில் வைத்து கடந்த 24 ஆம் திகதி மாலை அந்நாட்டு பொலிஸார் அதிரடியாக கைது செய்திருந்தனர்.

டெலிகிராம் செயலியின் மூலம் நடக்கும் சட்டவிரோதச் செயல்களுக்கு டெலிகிராம் துணை போவதாகவும், பயங்கரவாத செயல்களுக்கு ஆதரவளிப்பதாகவும் பாவெல் துரோவ் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.



# வடக்கு வங்காள விரிகுடா கடலுக்குச் செல்லாதீர்கள்!

## மீனவர்களுக்கு அறிவுறுத்தல்

வடக்கு வங்காள விரிகுடா கடற்பிராந்தியத்திற்கு செல்வதை எதிர்வரும் 2 நாள்களுக்கு தவிர்க்குமாறு மீனவர்கள் மற்றும் கடல்சார் ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பலத்த மழை, கடும் காற்று மற்றும் கடல் சீற்றம் தொடர்பில் எச்சரிக்கை அறிக்கையை வெளியிட்டு வளிமண்டலவியல் திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, வங்காள விரிகுடாவை அண்மித்த வளிமண்டலத்தில் காற்றழுத்த தாழ்வுநிலை அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இந்தக் கடற்பிராந்தியத்தில் பலத்த மழை பெய்வதுடன், மணித்தியாலத்திற்கு 70 முதல் 80 கிலோமீட்டர் வரையான கடும் காற்று வீசக்கூடுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கடல் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனால், இன்று வடக்கு வங்காள விரிகுடாவின் ஆழ்கடல் பகுதிக்கு செல்வதைத் தவிர்க்குமாறு திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.



# சுவாசம் தொடர்பான நோய்கள் அதிகரிப்பு

இலங்கையில் சுவாசம் தொடர்பான நோய்கள் தற்போது அதிகரித்து வருவதாகச் சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

சுவாச ஆரோக்கியம் தொடர்பான தேசிய சுகாதார மற்றும் பராமரிப்பு ஆராய்ச்சி நிறுவனத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நகரமயமாக்கல், வளி மாசுபாடு, காலநிலை மாற்றம் போன்ற காரணிகளால் சுவாச ஆரோக்கியம் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, இலங்கையில் சுவாச நோய்களின் ஆபத்தைக் குறைக்கும் நோக்கில் பல்வேறு திட்டங்களை ஆரம்பிப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அதிகரித்து வரும் முறைப்பாடுகள்




ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1,347 ஆக அதிகரித்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


கடந்த ஜுலை மாதம் 31ஆம் திகதி முதல் இது வரையான காலப்பகுதியிலேய இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 1,285 முறைப்பாடுகளும் வன்முறை தொடர்பில் ஆறு முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதேநேரம் கடந்த 24 மணித்தியாலங்களில் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 113 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழரசுக்கு ஒருவரால்தான் இன்று பரிதாப நிலையாம்!

## நீதியரசர் விக்னேஸ்வரன் கூறுகின்றார்



இலங்கைத் தமிழரசுக் கட்சியில் ஒருவரால்தான் இன்று அந்த கட்சிக்குப் பரிதாப நிலை ஏற்பட்டிருக்கிறது.

– இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

யாழிலுள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று நடாத்திய ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது..

பொது வேட்பாளர் விடயத்தில் நாங்கள் ஒதுங்கியிருக்கிறோம் என்பது உண்மைக்குப் புறம்பானது. எனது உடல்நிலை காரணமாக நான் இரண்டு வைத்தியசாலைகளில் இருந்து சிகிச்சை பெற்றுவிட்டு இப்போது வந்திருக்கிறேன்.

பொது வேட்பாளருக்கான கட்டுபணம் கட்டியது முதல் மும்முரமாக நாங்கள் செயற்பட்டு வருகிறோம். ஆனாலும் ஏதோவொரு வகையில் நாங்கள் ஒதுங்கியிருப்பதாக யாராவது நினைப்பதைக் கூட ஏற்க முடியாது. அது உண்மைக்குப் புறம்பானது.

அண்மைய சில நாள்களாக எனக்கு ஏற்பட்ட சுகயீனம் காரணமாக சில நிகழ்வுகளுக்கு நேரடியாக என்னால் வர முடியாது இருந்தது. ஆனால் கட்சி உறுப்பினர்கள் அதில் தொடர்ந்து பங்குபற்றி வந்திருக்கின்றனர்.

இந் நிலையில் பொது வேட்பாளரை ஆதரித்து தொடர்ந்து பிரசாரங்கள் முன்னெடுக்கபடும் என்பதுடன் அதில் நாமும் முக்கிய பணிகளை முன்னெடுக்கிறோம்.

இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எனக்கு நன்கு பரிச்சயமானவர். பலவருடங்களாக அவரை எனக்குத் தெரியும். ஆனால் அரசியலில் நிரந்தர நண்பரும் இல்லை. நிரந்தர எதிரியும் இல்லை. அவ்வாறே எங்களுக்குள் சில பல கருத்துக்கள் இருந்தது உண்மை.

அதாவது என்ன நடந்தது என்றால் 13 ஆவது திருத்தத்தில் உள்ள மாகாண சபைகளுக்கு இருக்கும் அதிகாரங்களில் பறிக்கபட்டுள்ள அதிகாரங்களை திரும்பவும் மாகாண சபைகளுக்கு வழங்குவது தொடர்பில் நடவடிக்க்சி முன்னெடுக்கப்பட்டது.

ஆனால் ஒரு வருடமாக அவர் எதனையும் செய்யாமல் தொடர்ச்சியாக ஏமாற்றி வந்தார். ஆக அவரிடமிருந்து வெறும் பேச்சை மட்டுமே எதிர்பார்க்கலாமே ஒழிய, தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் ஒன்றையும் அவர் செய்யமாட்டார்.

இதேவேளை அவர் எதையாவது செய்வார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது உண்மைதான். ஆனால் இனப்பிரச்சினையைத் தீர்ப்பாரா என்பதில் சந்தேகமும் இருந்தது. அந்த விடயத்தில் அக்கறை இல்லாதவராகவே அவருடைய செயற்பாடுகள் தென்பட்டன.

இவ்வாறாக தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வருவதால் பொது வேட்பாளர் என்ற விடயத்தை தமிழர் தரப்பு முன்னெடுத்தது. இதனடிப்படையிலே தற்போது பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டு இருக்கின்றார்.

தமிழரசு எம்.பிக்களான சுமந்திரன், சாணக்கியன் ஆகிய இருவரும் யாரோ ஒரு சிங்கள வேட்பாளரை ஆதிரிக்கும் நிலையில் இருந்தனர். அதிலும் முன்னர் சஜித் பிரேமதாஸாவிற்கு ஆதரவு வழங்கும் நிலைப்பாட்டில் இருந்தாலும் இப்போது ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்கப் போகிறார்கள் போல தென்படுகிறது.

உண்மையில் எங்கள் இனத்தின் எதிர்காலத்திற்காகப் பொது வேட்பாளர் என்ற செயற்பாட்டை முன்னெடுத்தோம். எமது மக்களுக்கு பலவிதமான பிரச்சினைகள் இருகிற நிலையில் மக்களை ஒன்றுதிரட்டி எங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்.

இவ்வாறான நிலைமையில் – இப்போது பலரும் ஆதரவை வழங்கி வருகின்ற நிலையில் – தமிழரசுக் கட்சி இன்னமும் உத்தியோக பூர்வமாக எதனையும் அறிவிக்கவில்லை.

ஆனால் எமக்கு தெரிந்தவரையில் அக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் சிறிதரன் போன்றோர் சகல ஆதரவையும் தருவார்கள் எனக் கூறி இருக்கின்றம்சியுடன் ஆரவை வழங்கி செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் சுமந்திரன் சாணக்கியன் போன்றோர் இதற்கு மாறான நிலைப்பாட்டில் இருக்கின்றனர் என்று எனக்குத் தெரியாது.

தேர்தலில் அனுர குமார திசாநாயக்க வெற்றி பெற்று வந்தால் நாட்டை சூறையாடிய ராஜபக்ஷ தரப்பு உட்படப் பல அரசியல்வாதிகள் சிறையில் அடைக்கப்படுவார்கள் என்பது உண்மை. ஆனால் பொருளாதார ரீதியாக என்ன செய்வார் என்பதில் சந்தேகம் உள்ளது.

அவருக்கு ஆதரவு என்றால் சீனாதான். அப்படி சீன ஆதரவுடன் செயற்பட்டால் அவரால் இந்த நாட்டை பிரச்சினை இல்லாமல் கொண்டு செல்ல முடியாது. பொருளாதார ரீதியாக மேலும் பதிப்பு ஏற்படும்.

ஆட்சியாளர்களின் அரசியல் ரீதியான செயற்பாடுகளில் மக்களுக்கு விரக்தி இருக்கிறது. அதனால் மக்கள் இப்போது அவருக்கு வாக்களிகலாம். ஆனால் பொருளாதார ரீதியில் முன்னேற்றத்தைச் செய்ய முடியாது.

மேலும் போர்க்குற்றம் தொடர்பில் அவர் பேசுகிற போது இராணுவத்தினர் தண்டிக்கப்பட மாட்டார்கள் எனக் கூறுகிறார். அவ்வாறு அவர் கூறுவதென்பது இதுவரை காலமும் ஆட்சியில் இருந்தவர்கள் கூறுகிற ஒரு விடயம்தான். இதனையே எமது மக்கள் எதிர்த்து வருகின்றனர்.

அவருக்கும் சிங்கள, பௌத்த தேசியவாத சிந்தனை உள்ளது. அவரையும் எங்கள் மக்கள் நம்புவதற்கு தயாரில்லை. மக்களது இத்தகைய சிந்தனையில் இருந்தே நாம் பொதுவேட்பாளர் நிறுத்தியுள்ளோம்.

தமிழரசுக் கட்சியில் இப்போதும் இருப்பவர்களில் ஒரு தரப்பினர் வெளியேறி புதிய கட்சியையும் புதிய கூட்டையும் அமைப்பது தொடர்பில் முழுமையாக எனக்கு தெரியாது. ஆனாலும் அவ்வாறு நடப்பதற்கும் சாத்தியங்கள் இருக்கின்றன.

ஏனெனில் ஒரே ஒரு மனிதரால் தான் இன்றைக்கு அந்த கட்சிக்கு பரிதாப நிலை ஏற்பட்டிருக்கிறது.

நானும் அந்த கட்சியில் இருந்து வெளியேறியிருந்தேன். ஆக மொத்தத்தில் இன்றைக்கு நான் வெளியேறவும் இப்ப கட்சி பிரியவும் அந்த ஒருநபர் தான் முழுக் காரணமாக இருக்கிறார். – என மேலும் தெரிவித்தார்.



# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் தமிழர் தேசத்தின் அரசியல் நீதிக்கான போராட்டம்தான்!

## இன்றைய கவனவீர்ப்பை ஒட்டி அருட்தந்தை மா.சத்திவேல் விவரிப்பு

சமஷ்டியை அங்கீகரிக்குமாறு தெற்கின் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வலியுறுத்துவதற்கு சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தினத்தில் ஒன்று திரள்வோம் என்று சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

நாட்டில் நிலவிய தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு யுத்த காலப்பகுதியில் இலங்கை அரச படைகளால் புரியப்பட்ட மனிதகுலம் ஏற்காத யுத்த குற்றங்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு பேரினவாத கருத்தியல் கொண்ட எந்தவொரு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களும் துணிய மாட்டார்கள் என்பது மட்டும் உறுதி.

ஆயுத யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் கடந்த 15 வருட காலமாக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தமது அன்புக்குரியவர்களைத் தேடி கிடைக்காத நிலையில் 2,500 நாள்களாகத் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி (அதாவது இன்று) சர்வதேச காணாமலாக்கப்பட்டோருக்கான தினத்தில் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்துவதற்கு ஆயத்தங்களைச் செய்துள்ளனர்.

இப்போராட்டத்திற்கு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு தமது முழுமையான ஆதரவைத் தெரிவிப்பதோடு வடகிழக்கு வாழ் அனைவரும் அப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்றது.

தற்போது ஜனாதிபதி தேர்தலுக்கு முன் நிற்கும் பிரதான வேட்பாளர்களும் அவர்களின் பின்புலத்தில் இயங்கும் கட்சிகளும் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு யுத்தத்திற்கும் இனப்படுகொலைக்கும் ஆதரவு தெரிவித்தவர்களே. அத்தோடு தமது ஆதரவாளர்களை யுத்த வெற்றி கொண்டாட தூண்டியவர்களுமாவர்.

இவர்கள் இனி மேலும் தமிழர்களுக்கு யுத்தக்குற்றங்களுக்கான நீதியையோ, அரசியல் நீதியையோ பெற்றுக் கொடுக்கப் போவதில்லை. இவர்களின் உண்மையை கண்டறிவதற்கான வழிமுறைகள் எல்லாம் மாயமானதே. அதில் தமிழர்களுக்கு இனியும் நம்பிக்கை இல்லை.

அதுமட்டுமல்ல இவர்கள் எதிர்நோக்கி இருக்கும் ஜனாதிபதி தேர்தல் மற்றும் அதனைத் தொடர்ந்து வரும் அனைத்து தேர்தல்களிலும் பேரினவாத வாக்குகளையே நம்பி இருக்கின்றனர்.

பேரினவாத பௌத்த துறவிகளையே கவசமாகவும் கொண்டுள்ளனர். இவர்களை எதிர்த்து தமிழர்களுக்கு எத்தகைய நீதியையும் உறுதி செய்யப்போவதுமில்லை.

இவர்கள் வடகிழக்கில் மக்கள் சந்திப்புகளை நடத்தும் போதும் பிரசாரப் பொதுக்கூட்டங்களில் போதும் யுத்தக்குற்றங்கள் காணாமல், ஆக்கப்பட்டோர் விடயமாக எத்தகைய கருத்துகளையும் கூறுவதும் கிடையாது.

இவர்களுக்கு சாமரம் வீசுகின்ற தமிழ் அரசியல்வாதிகளும் இவ் விடயம் சம்பந்தமாக பிரதான வேட்பாளர்களிடம் கேள்வி கேட்பதற்கோ பொது மேடைகளில் கருத்து கூறுவதற்கோ தயங்குவது தமிழர்களுக்கு இழைக்கும் அநீதியாகும்.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் என்பது வெறுமனே தமது உறவுகளைத் தேடும் போராட்டம் மட்டுமல்ல. அது தமிழர் தேசத்தின் அரசியல் நீதிக்கான போராட்டத்தின் அடையாளமாகவும் உள்ளது.

போராட்டத்தில் ஈடுபடுவோரில் நூற்றுக்கும் அதிகமானோர் தீர்வு கிட்டாத நிலையில் வேதனையில் மரணத்தை தழுவியுள்ளனர். இதனை சாதாரண மரணம் என நாம் கடந்து செல்ல முடியாது. நீதி நிலை நாட்டப்படாது நடத்தப்பட்ட திட்டமிட்ட மறைமுக கொலை எனவே அடையாளப்படுத்தல் வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்தும் போராட்டம் மரணிக்காது உள்ளமைக்கு போராட்ட அமைப்புக்களின் மனத்திடமே காரணம் எனலாம். அப்போராட்டத்தினை உயிரோட்டமுள்ளதாக்க தமிழர் தேசமாக எம் பங்களிப்பை செய்து எம் குரலை சர்வதேசத்திற்கு கேட்கச் செய்வோம்.

எமது உறவுகளும் மாவீரர்களுமாக இலட்சங்களை தாண்டியோர் இரத்தம் சிந்திய நிலத்தில் நின்றும் பேரினவாத அரசுக்கும் இனப்படுகொலை சூத்திர தாரிகளுக்கும் கொடி பிடித்துக் கொண்டு திரியும் தமிழர் தேச அரசியல் நரிகளுக்கு எதிராகக் குரல் எழுப்பவும் ஒன்று திரள்வோம்.

இந்தியா இன்றும் எமக்கான அரசியல் தீர்வாக 13 ஆம் திருத்தத்தை திணிக்க முயல்கிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவும் யுத்தக் குற்றங்களுக்கும் காணாமலாக்கப்பட்டோர் விடயத்துக்கும் சர்வதேச விசாரணையோடு காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி என்பது அரசியல் நீதி என்பதை மையப்படுத்தி சுயநிர்ணய உரிமையை உறுதி செய்து சமஷ்டியை அங்கீகரிக்குமாறு தெற்கின் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வலியுறுத்தவும் ஒன்று திரள்வோம். – என அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளால் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

"என்னால் வழங்கக்கூடியவற்றை மாத்திரமே நாட்டுக்கு வாக்குறுதியளிக்கின்றேன். என்னால் முடியாததை வாக்குறுதியளித்து நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடைச் செய்ய தயாரில்லை."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான ஐந்து வருடங்கள்" என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தை நேற்று வெளியிட்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் "ரணிலுடன் இலங்கைக்கு வெற்றிகரமான ஐந்து வருடங்கள்" என்ற தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் வெளியிடப்பட்டது.

இந்த தேர்தல் விஞ்ஞாபனம் அடங்கிய www.ranil2024.lk இணையத்தளம் இதன்போது ஜனாதிபதியால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஜனாதிபதித் தேர்தலுக்கான எனது கொள்கைப் பிரகடனம் வெறுமனே கொள்கை பிரகடனமாக மாத்திரமின்றி நாட்டின் மீட்சிக்காக செயற்படுத்த வேண்டிய துரித வேலைத் திட்டங்களை உள்ளடக்கியதாகவே அமைந்திருக்கிறது.

மற்றைய வேட்பாளர்கள் நீண்ட கால தீர்வுகளை சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தற்போதைய தருணத்தில் இலங்கைக்கு நீண்ட கால தீர்வு திட்டங்கள் பொருத்தமாக அமையா. இலங்கை தற்போது நெருக்கடிக்குள் இருக்கிறது. பொருளாதாரமும் அரசியலும் சரிவடைந்திருக்கிறது. 2022 இல் நாட்டிலிருந்த குழப்ப நிலைக்கு மத்தியில் நாட்டை ஏற்றுக்கொள்ள எவரும் இருக்கவில்லை.

என்னோடு பணியாற்ற வந்த பிரதமரும் அமைச்சர்களும் என்னுடன் உள்ளனர். எவ்வாறாயினும், 2023 களில் நாம் பொருளாரத்தை நிலைத்தன்மைக்கு கொண்டு வந்தோம். பொருளாதார நிலைத்தன்மையை முன்னோக்கி கொண்டுச் சென்றிருக்கிறோம். நிலைத்தன்மையைப் பாதுகாக்க எதிர்வரும் காலங்களிலும் பாதுகாக்க வேண்டும். அதற்காக இலங்கையை ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நகர்த்த வேண்டியுள்ளது.

போலி வாக்குறுதிகளை வழங்கி நாட்டை மீண்டும் சரிவிற்குள் தள்ளிவிட வேண்டிய தேவை எனக்கு இல்லை. பொருளாதாரம், அரசியல் என்பன சரிவடைந்த நாடுகளின் நிலையை இன்று நாம் காண்கிறோம். பங்களாதேஷூம், மாலைதீவும் அடைந்துள்ள நிலைமை நமக்குத் தெரிகிறது. நாம் கண்ட துர்பாக்கிய நிலையை மீண்டும் உருவாக்கினால் அடுத்த சந்ததியின் எதிர்காலம் சூனியமாகிப் போகும்.

அதனால் நாட்டில் நிலைத்தன்மையைப் பாதுகாத்து பொருளாதாரத்தை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இளையோரின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கான சட்டத்தைத் தயாரித்துள்ளோம். அதனை நிறைவேற்றிக்கொள்ள வேண்டியுள்ளது. அதற்காக மாறுப்பட்ட பொருளாதார திட்டங்களை செயற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

இலங்கை – சர்வதேச நிதிய ஒப்பந்தம் மற்றும் இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் நாம் செயற்பட வேண்டியது அவசியமாகவுள்ளது. அதேபோல் சீனா, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கிகளுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் செயற்பட வேண்டிய அவசியமும் உள்ளது.

தற்போதும் நாம் அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே செயற்படுவதால் எதிரணி வேட்பாளர்கள் அதனை செய்யத் தயாராக உள்ளனரா என்பதே எனது கேள்வியாகும். இவற்றைத் திருத்தம் செய்யாமல் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்த அவர்களால் முடியுமா?

இதன்கீழ், முதற் காரணியாக தேரவாத வர்த்தக பொருளாதாரத்தை செயற்படுத்துகிறோம். அனுராதபுர யுகத்தில் இலங்கையில் சிறந்த வர்த்தகம் காணப்பட்டுள்ளது. இலங்கையின் அமைவிடம் அதற்கான சாதகத்தை ஏற்படுத்தி



தந்திருந்தது. அனுராதபுரத்தில் அமைக்கப்பட்ட அனைத்துக் குளங்களும் சொந்த நிதியில் அமைக்கப்படிருப்பதே அப்போதைய பொருளாதார வலுவுக்கு சான்றாகும்.

ஆனால் மகாவலியைக் கட்டமைக்க வெளிநாட்டு உதவியை நாடினோம். இந்த மாற்றத்தை புரிந்துகொள்ள வேண்டும். இன்று தாய்லாந்தும் வியட்நாமும் தேரவாத வர்த்தக முறைமைகளை முழுமையாக பின்பற்றுகின்றன. அவற்றை நாமும் செயற்படுத்துவதாக தேர்தல் பிரகணடத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.

அடுத்தாக நாட்டு மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்தனர். அதனால் பொருளாதார வளர்ச்சியில் மக்களுக்கும் நிவாரணம் கிடைக்க வேண்டும். அதனால் உறுமய திட்டத்தின் கீழ் 20 இலட்சம் பேருக்கு காணி உறுதிகளை வழங்குகிறோம். குறைந்த வருமானம் பெறும் 2 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டு உரிமைகளை வழங்குகிறோம். தோட்டங்களை கிராமங்களாக்கி மக்களுக்கு காணி உறுதி வழங்கவுள்ளோம். மக்கள் உரிமையைப் பாதுகாக்கும் பணிகளை இந்த திட்டங்களின் கீழ் முன்னெடுக்கிறோம்.

எதிர்காலத்தில் சலுகை அடிப்படையில் குறைந்த வருமானம் பெறுவோருக்கான வீட்டுக் கடன்களையும் வழங்குவோம் மத்திய தரத்தினருக்கும் கடன்களை வழங்குவோம். சிறு மற்றும் மத்திய தர தொழில்துறை பாதுகாப்பிற்காக தற்போதும் 50 பில்லியன்களை நாம் வழங்கியிருக்கிறோம்.

மூன்றாவதாக எமது பொருளாதார செயற்பாடுகளை காலநிலை அனர்த்தங்களுக்கு வழி செய்யாத வகையில் முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம். இவற்றோடு ஐந்து முக்கிய காரணிகள் உள்ளன. முதலில் வாழ்க்கை சுமையைக் குறைக்க வேண்டும். அதற்காக ரூபாவின் பெறுமதியைப் பலப்படுத்த வேண்டியுள்ளது.

அடுத்தாக தொழில்வாய்ப்புக்கள் உருவாக்குவோம். மூன்றாவது வரிச்சலுகைகளை வழங்குவோம். அடுத்த படியாக பொருளாதாரத்தை மேம்படுத்துவோம். அதனால் ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நகர்வதே இலக்காக உள்ளது. பின்னர் "உறுமய", "அஸ்வெசும" திட்டங்களை செயற்படுத்துவோம்.

எனவே புதிய கொள்கைகளை கொண்டு வந்து விவாதித்துக் கொண்டிருப்பதை விடவும் மக்கள் கஷ்டத்தைப் போக்குவதற்கான திட்டங்களை செயற்படுத்துவோம். "இயலும் ஸ்ரீலங்கா" திட்டத்தின் கீழ் துரிதமாக முன்னெடுக்க கூடிய செயற்பாடுகளை நாம் நடைமுறைப்படுத்துவோம். அதற்காக நிவாரணங்களைப் பெற்றுக்கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

குறிப்பாக விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை துரிதமாக செயற்படுத்தலாம். அதற்காக அடிப்படைச் செயற்பாடுகளை இப்போதும் முன்னெடுத்திருக்கிறோம். சுற்றுலாத் துறையில் 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பணிகளை ஆரம்பித்துள்ளோம். உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரிக்க எதிர்பார்க்கிறோம். தொழிற்சாலை அபிவிருத்தி வர்த்தக வலயங்களை ஸ்தாபிக்கும் பணிகள் உள்ளிட்ட பல பணிகளை பிங்கிரியவில் ஆரம்பித்திருக்கிறோம். வடக்கிலும் ஹம்பாந்தோட்டையிலும் ஆரம்பிக்க தயாராக இருக்கிறோம்.

அதேபோல் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியை

தொடர்ச்சி▼

# நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளால் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

தொடர்ச்சி▲

பொருளாதாரத்தின் முக்கிய பங்காக இணைக்கப் போகிறோம். அடுத்ததாக டிஜிட்டல் மயமாக்கலுக்கான பணிகள் முழுமையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேபோல் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்களை இளையோருக்கு உருவாக்கி கொடுக்க வேண்டியுள்ளது.

நான்கு வருடங்களாக எந்த தொழில்வாய்ப்புக்களையும் வழங்க முடியாமல் போனது. நாம் முன்னேறும் போது தொழில் வாய்ப்புக்கள் உருவாகும்.. அதன் கீழ் ஸ்மார்ட் விவசாயம் செய்வதற்கான நிதி உதவிகளை வழங்க எதிர்பார்க்கிறோம். சுற்றுலா துறையிலும் இவ்வாறான தொழில்களை வழங்குவோம். அரசாங்கத்தின் கீழ் உள்ள தொழில்களுக்கும் உள்வாங்க எதிர்பார்க்கிறோம்.

பாடசாலை கல்வியை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு தொழில் கல்வி பயில்வதற்கான வவுச்சர் ஒன்றை வழங்க எதிர்பார்க்கிறோம். தனியாரின் கீழ் செய்வதா அரசாங்கத்தின் கீழ் செய்வதா என்பதை தீர்மானிக்க அவர்களுக்கு உரிமை உள்ளது. அதனால் தொழில் பயிற்சி நிலையங்கள் அனைத்தையும் ஒரு கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவோம். அதேபோல் அனைவருக்கும் ஆங்கில கல்வி என்ற திட்டமும் செயற்படுத்தப்படும்.

ஹிங்குரங்கொடையில் புதிய விமான நிலையமொன்றை அமைக்கவுள்ளோம். தோட்டங்களை கிராமங்களாக்கும் திட்டத்தை செயற்படுத்துவோம். அதேபோல் திருடர்களை பிடிப்பது பற்றி பேசுவோர் அதற்கான வழியை சொல்லவில்லை. ஆனால் நாம் அதற்குத் தேவையான சட்டங்களை கொண்டு வந்திருக்கிறோம். இவற்றை செயற்படுத்த பாராளுமன்ற செயற்குழுக்களை அமைத்து சபாநாயகரின் கீழ் அவற்றை வழிநடத்துவோரை தெரிவு செய்வோம்.

தொழிற்சங்கத்தினர், சட்ட தொழில் செய்வோர், வர்த்தக துறை சார்பில் ஒருவர் என்ற அடிப்படையில் அந்த குழுக்களை வழிநடத்துவோரை தெரிவு செய்வோம். பெண்களை வலுவூட்டும் சட்டம் நிறைவேறியுள்ளது. அரச ஊழியர்கள் புதிய பாடங்களை கற்பதற்கு ஒரு வருட விடுமுறை வழங்குவோம். அரச கொள்கை மற்றும் முகாமைத்துவ பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்போம். இவ்வாறு துரிதமாக செய்யக்கூடிய பல திட்டங்கள் பற்றி சிந்திக்கிறோம்.

2048 ஆண்டு வரையில் தூர நோக்கு சிந்தனையுடன் பார்த்து செயற்படுகிறோம். அதனை செய்ய முடியும் என்று சொல்பர்களுடனேயே நாம் பயணிக்கிறோம். அதனால் செப்டெம்பர் 21 ஆம் திகதி சிலிண்டருக்கு வாக்களியுங்கள் அடுத்த நாள் முதல் அடுக்கட்ட பணிகளை நாம் ஆரம்பிப்போம்."- என்றார்.

# சாதனை படைத்த சஹ்மி ஷஹீத் ஜனாதிபதியுடன் நேற்றுச் சந்திப்பு




இலங்கையைச் சுற்றி 45 நாள்களில் 1500 கிலோ மீற்றர் தூரம் நடந்து சாதனை படைத்த பேருவளையைச் சேர்ந்த சஹ்மி ஷஹீத் நேற்று முன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, கொழும்பில் உள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தார்.

இவர் தனது கிராமமான பேருவளையில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்து, நாட்டைச் சுற்றி 1,500 கிலோ மீற்றர் தூரம் நடந்து இந்த சாதனையைப் பதிவு செய்துள்ளார்.

அதன்போது பேருவளை, மிரிஸ்ஸ, ஹிரிகெட்டிய, ரன்ன, ஹம்பாந்தோட்டை, வெல்லவாய, மொனராகலை, சியம்பலாண்டுவ, பொத்துவில், நிந்தவூர், செங்கலடி, நிலாவெளி, முல்லைத்தீவு, பரந்தன், பருத்தித்துறை, சுன்னாகம், மன்னார், அநுராதபுரம், புத்தளம், கொழும்பு, மாரவில, நீர்கொழும்பு, கொழும்பு ஆகிய முக்கிய நகரங்களைக் கடந்து பேருவளைக்குத் திரும்பினார்.

இந்த பயணத்தின் போது, சமூக வலைதளங்கள் மூலம் தான் பயணிக்கும் இடங்களைப் பார்வையாளர்களுக்குத் தெரிவிக்கவும் நடவடிக்கை எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலலுக்கான திகதி வெகுவிரைவில் அறிவிக்கப்படும்

## தேர்தல்கள் ஆணைக்குழு தகவல்




உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் விதித்துரைக்கப்பட்டுள்ள வகையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள தத்துவங்கள் மற்றும் பொறுப்புக்களை நடைமுறைப்படுத்தலுக்காக அரச நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளவதாக இலங்கை பிரஜைகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு உறுதியளிக்கிறது.

வெகுவிரைவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பு தொடர்பில் திகதியை அறிவிக்க ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இலங்கை பிரஜைகளின் ஜனநாயக உரிமைகளை மேம்படுத்தவும், பாதுகாக்கவும் தேர்தல்கள் ஆணைக்குழு தனது பொறுப்புக்களை சிறந்த முறையில் செயற்படுத்த தீர்ப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள பலத்தை ஆணைக்குழு முழுமையாக ஏற்றுக்கொள்கிறது. நீதிமன்றத்தின் தீர்ப்புக்கமைய சகல தரப்பினரும் செயற்பட வேண்டும் எனவும் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் விதித்துரைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று முன்தினம் முன்தினம் புதன்கிழமை கூடியது.

- இந்த கலந்துரையாடல் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் –

“2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு உரிய இலக்கம் SCFR 69 /2023, SCFR 90 / 2023 மற்றும் SCFR 139 / 2023 இலக்க அடிப்படை உரிமை மனுத் தொடர்பில் 2024.08.22 ஆம் திகதி உயர்நீதிமன்ற ஐவர் அடங்கிய நீதியரசர் குழாம் வழங்கிய தீர்ப்பினை தேர்தல்கள் ஆணைக்குழு கௌரவமான முறையில் ஏற்றுக்கொண்டுள்ளது.

வாக்காளர்களின் சட்ட ரீதியிலான அபிலாசைகள், வாக்களிக்கும் உரிமை , அரச நிறுவனங்களின் செயற்பாடுகளினால் ஏற்படக் கூடிய நியாயமான கோட்பாடுகள் மற்றும் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதி வழங்கள், தொடர்பில் அரச நிறுவனங்களிடம் உள்ள இயைவான அதிகாரங்களை செயற்படுத்துவது தொடர்பில் மீளாய்வு செய்ததன் பின்னர் வழங்கப்பட்டுள்ள மீயுயர்வான நீதிமன்றத்தின் தீர்ப்பாக இந்த தீர்ப்பு கருதப்படுகிறது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தீர்மானிக்கப்பட்டதற்கமைய நடத்தாமை மக்களின் அடிப்படை தொடர்ச்சியான மீறப்பட்டுள்ளது என உயர்நீதிமன்றம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கட்டளை பிறப்பித்துள்ளது. “சட்ட நியதிகளுக்கு அமைய தேர்தலை நடத்துவதற்கு தன்னிச்சையான நடவடிக்கைகள் தொடர்பில் உரிய அவதானம் செலுத்தப்பட்டு , 2023 உள்ளூராட்சி மன்ற தேர்தலை வெகுவிரைவில் நடத்துமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றம் விரிவான காரணிகளை குறிப்பிட்டு, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பை நடத்துவதற்கு திட்டமிடல், ஒருங்கிணைத்தல், வளங்களை வேறுப்படுத்தல், அதற்காக ஏனைய தரப்பினரது ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளல், மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் நிறைவேற்றுத்துறை உட்பட தேர்தல்கள் ஆணைக்குழுவின் தத்துவங்கள், பொறுப்பு மற்றும் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் வெவ்வேறாக தெளிவுப்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோல் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான உரிய சட்டம் உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தல் வாக்கெடுப்பு கட்டளைச் சட்டம் என்றும், சட்டத்தில் விதித்துரைக்கப்பட்டுள்ள காலவரையறைக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என நீதிமன்றம் விசேடமாக அவதானம் செலுத்தியுள்ளது.

பொருளாதார பாதிப்பினால் ஏற்பட்ட நிதி பற்றாக்குறை காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாமல் போனது என்று குறிப்பிடப்படுவது குறித்து ஆராய்ந்த உயர்நீதிமன்றம் “ செலவினங்கள் தொடர்பில் தீர்மானங்கள் எடுப்பது வாக்கெடுப்புக்கான பணிகளை முன்னெடுத்ததன் பின்னராகும். அந்த செயற்பாடு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதுடன் தொடர்புடையதல்ல,

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பை நடத்துவதற்கு தேவையான நிதியை பெற நிதியமைச்சரின் அனுமதியை கோரி தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்காத காரணத்தால் தேர்தல் பணிகளை இடைநிறுத்த நேரிட்டது.இதனால் சட்டத்தில் விதித்துரைக்கப்பட்ட காலவரைக்குள் தேர்தலை நடத்த முடியாமல் போனது.

மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்கு சார்பாக அழுத்தமான நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு அரசியலமைப்பு மற்றும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய தேர்தலை நடத்துவதற்கு சகல அரச நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டு செயற்படுவது தேர்தல்கள் ஆணைக்குழுவின் கடமை மற்றும் பொறுப்பு என உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

2024.08.22 ஆம் திகதி உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் விதித்துரைக்கப்பட்டுள்ள வகையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள தத்துவங்கள், மற்றும் பொறுப்புக்களை நடைமுறைப்படுத்தலுக்காக அரச நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளவதாக இலங்கை பிரஜைகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு உறுதியளிக்கிறது.

இலங்கை பிரஜைகளின் ஜனநாயக உரிமைகளை மேம்படுத்தவும், பாதுகாக்கவும் தேர்தல்கள் ஆணைக்குழு தனது பொறுப்புக்களை சிறந்த முறையில் செயற்படுத்த இந்த தீர்ப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள பலத்தை ஆணைக்குழு முழுமையாக ஏற்றுக்கொள்கிறது. அதேபோல் உயர்நீதிமன்றத்தில் தீர்ப்புக்கு அமைய சட்டத்தால் விதித்துரைக்கப்பட்டுள்ளதற்கமைய வெகுவிரைவில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்பு தொடர்பில் திகதியை அறிவிக்க தீர்மானித்துள்ளது.

உயர்நீதிமன்ற தீர்ப்பினை கருத்திற் கொண்டு தேர்தல்கள் ஆணைக்குழு தனது நோக்கத்தை செயற்படுத்திக் கொள்வதற்காக அரசியலமைப்பு மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் ஊடாக ஆணைக்குழுவுக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ள தத்துவங்கள் மற்றும் பொறுப்புக்கள் செயற்படுத்தப்படும். சகல தரப்பினரும் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய செயற்பட வேண்டும்.”– என்று குறிப்பிடப்பட்டுள்ளது.






# தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை மகாநாயக்கரிடம் கையளித்த சஜித்

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனம் மல்வத்தை மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஸ்ரீதலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதனையடுத்து, அவர் மல்வத்தை மகாநாயக்கரிடம் சென்று ஆசி பெற்றுக் கொண்டமையுடன் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் கையளித்துள்ளார்.








## சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் இன்று!

# நீதி வேண்டி சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை...!




- நவீனன் -

(வட கிழக்கு மாகாணங்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கமும் ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸும் இணைந்து சர்வதேச சமூகத்திடம் நீதி வேண்டிக் கோரிக்கை விடுத்துள்ளனர்.)

உலகெங்கிலும் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்ட எண்ணற்ற நபர்களை நினைவுகூரும் நாளாக, காணாமல் போனோர்களுக்கான சர்வதேச தினம் ஓகஸ்ட் 30 ஆம் நாள் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனை முன்னிட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கமும் ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸும் இணைந்து சர்வதேச சமூகத்திடம் நீதி வேண்டி கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கையில், குறிப்பாக நாட்டின் உள்நாட்டுப் போரின் போதும் அதற்குப் பின்னரும் பல தசாப்தங்களாக மோதல்கள், அடக்குமுறைகள் மற்றும் வலுக்கட்டாயமாகக் காணாமல் போதல்களைச் சந்தித்துள்ள தமிழ் சமூகத்துக்கு இந்த நாள் குறிப்பிட்ட முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது.

காணாமல் போன ஆயிரக்கணக்கான தமிழர்களின் தீர்க்கப்படாத தலை விதி இலங்கையின் வரலாற்றில் ஒரு இருண்ட அத்தியாயம், நீதி மற்றும் நல்லிணக்கத்துக்கான முயற்சிகள் மீது நீண்ட அழுத்தத்தை வீசுகிறது.

### தமிழர் போராட்டமும் காணாமல் ஆக்கப்பட்டோரும்

இலங்கையில் வலுக்கட்டாயமாக காணாமல் போனவர்கள் இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது (1983-2009), அதன் முடிவுக்கு அடுத்த வருடங்களில், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டதன் மூலம் தமிழர்கள் விகிதாசாரத்தில் பாதிக்கப்பட்டனர்.

பொது மக்கள், செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் முன்னாள் போராளிகள் உட்பட பல தமிழர்கள், இலங்கை பாதுகாப்புப் படையினரால், துணை இராணுவக் குழுக்களால் அல்லது அடையாளம் தெரியாத நபர்களால் அழைத்துச் செல்லப்பட்டனர். பல சந்தர்ப்பங்களில், அவர்கள் மீண்டும் திரும்பி வரவில்லை.

வலுக்கட்டாயமாக காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 20,000 இற்கும் அதிகமாக உள்ளது. அவர்களில் பலர் மே 2009 இல் ஆயுத மோதலின் முடிவில் மாநில பாதுகாப்புப் படைகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அத்துடன் பதில்களைத் தேடும் குடும்பங்கள் மிரட்டல் மற்றும் நீதி கோரிப் பழிவாங்கும் அச்சத்தை எதிர்கொண்டுள்ளனர். இது தனிநபர்களின் அடிப்படை உரிமைகளானச் சுதந்திரம், நீதி மற்றும் கண்ணியத்தை பறித்துள்ளது.

மே 2009 இல் உள்நாட்டுப் போர் உத்தியோக பூர்வமாக முடிவடைந்த நிலையில், காணாமல் போனவர்களின் இழப்பு தமிழ் சமூகத்தை தொடர்ந்து பாதித்துள்ளது.

இலங்கை அரசு சில காணாமல் போனதை ஒப்புக் கொண்டுள்ளது. ஆனால் பொறுப்புக் கூறலில் அர்த்தமுள்ள முன்னேற்றம் மெதுவாகவே உள்ளது. பல்வேறு கமிஷன்கள் மற்றும் விசாரணை வாக்குறுதிகள் இருந்தபோதிலும், அரசியல் விருப்பமின்மை, அமைப்பு ரீதியான தடைகளுடன் சேர்ந்து, தண்டனையில் இருந்து விடுபடாத நிலை நீடித்து வருகிறது.

காணாமல் போன தங்கள் உறவினர்களைத் தேடித் தேடி அலைய வேண்டுமா அல்லது தொடர்ந்து தேடுவதா என்று தெரியாமல் குடும்பங்கள் ஒரு கொடூரமான குழப்பத்தில் விடப்பட்டுள்ளன.

### குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் மீதான தாக்கம்

காணாமல் போன தமிழர்களின் குடும்பங்களுக்கு, தொடரும் நிச்சயமற்ற நிலை தாங்க முடியாதது. பதில்களைத் தேடுவதற்கும், வெகுஜன புதைகுழிகளுக்குச் செல்வதற்கும், மனித உரிமை அமைப்புகளுடன் ஈடுபடுவதற்கும், விசாரணைகளில் கலந்துகொள்வதற்கும், பல வருடங்களாக

தொடர்ச்சி▼

**Australian Tamil Congress**
A Unified Voice for All Tamils

ATC

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம்
வடக்கு கிழக்கு மாகாணங்கள்
ARED
Association for Relatives of the Enforced Disappearances
North & East Provinces

**JOINT MEDIA RELEASE - 30 August 2024**

**Tamils mark the International Day of the Disappeared**

**Introduction**
The International Day of the Disappeared is a day to honour and remember the countless individuals who have been forcibly disappeared across the globe. In Sri Lanka, this day holds particular significance for the Tamil community, which has endured decades of conflict, repression, and enforced disappearances, especially during and after the country's civil war. The unresolved fate of thousands of Tamils who have gone missing is a dark chapter in Sri Lanka's history, casting a long shadow over efforts toward justice and reconciliation.

**The Tamil Struggle: Enforced Disappearances in Sri Lanka**
During Sri Lanka's civil war (1983-2009), and in the years following its conclusion, Tamils were disproportionately affected by enforced disappearances. Many Tamils, including civilians, activists, journalists, and former combatants, were taken by Sri Lankan security forces, paramilitary groups, or unidentified actors with no information disclosed to their families regarding their whereabouts or fate. In many cases, they were never seen again. The forcibly disappeared number is over 20,000, and many of them were handed over to the state's security forces at the end of the armed conflict in May 2009.

Families seeking answers have faced bureaucratic stonewalling, intimidation, and fear of retaliation for demanding justice. This has stripped individuals of their most basic rights of freedom, justice, and dignity.

While the civil war officially ended in May 2009, its legacy of disappearances continues to haunt the Tamil community. The Sri Lankan government has acknowledged some disappearances, but meaningful progress towards the accountability has been slow. Despite various commissions and promises of investigation, the lack of political will, coupled with systemic obstacles, has perpetuated impunity.




## சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் இன்று!

# நீதி வேண்டி சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை...!

தொடர்ச்சி▲

மௌனம் அல்லது மறுப்புகளைச் சந்தித்திருக்கிறார்கள்.

அத்துடன் உணர்ச்சி மற்றும் உளவியல் தாக்கங்களால் மிகப்பெரிய அளவில் பல குடும்பங்களை நிரந்தரமான துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.


பல குடும்பங்கள் பல ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ச்சியான விழிப்புணர்வு மற்றும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதே நேரத்தில் தங்கள் சொந்தங்களில் 200 இற்கும் மேற்பட்டவர்களை இழந்து, தங்கள் அன்புக்கு உரியவர்களின் இருப்பிடம் அல்லது விதியை அறியாத வேதனையில் கடந்து செல்கின்றனர்.

இலங்கையில் உள்ள ஒட்டுமொத்த தமிழ் சமூகமும் இந்தக் காணாமல் போனவர்களின் வடுகளோடு தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர். வலுக்கட்டாயமாக காணாமல் போதல்களால் குடும்ப உறுப்பினர்களை இழக்கும் அதிர்ச்சியானது சமூக ஒற்றுமையையும், அரசின் மீதான நம்பிக்கையையும், நீடித்த அமைதிக்கான நம்பிக்கையையும் குலைக்கிறது. காணாமல் போனவர்களைத் தேடி உயிர் பிழைத்தவர்களில் கணிசமான பகுதியான பெண்கள், கணவன் அல்லது மகன்கள் இல்லாத நிலையில், பொருளாதாரக் கஷ்டங்களுக்கு எதிராகப் போராடி, பெரும்பாலும் உணவளிப்பவர்களாக மாறுகிறார்கள்.

**நீதிக்கான அழைப்பு**

வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயற்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், உலகிலேயே அதிக எண்ணிக்கையில் காணாமற் போனோர் எண்ணிக்கையில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ள போதிலும், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையை இலங்கை அரசு தொடர்ச்சியாக மறுத்துள்ளது.




காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் குடும்பங்களின் குரல்களை வலுப்படுத்துவதற்கும் நீதி மற்றும் பொறுப்புக் கூறலுக்கான அழைப்பைப் புதுப்பிப்பதற்கும் சர்வதேச காணாமல் போனோர் தினம் ஒரு முக்கிய வாய்ப்பாகும்.

இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட காணாமல் போனோர் அலுவலகம் போன்ற உள்நாட்டுப் பொறிமுறைகள் குறைபாடுள்ளவை. அத்துடன் காணாமல் போனவர்கள் தொடர்பில் முழுமையாக விசாரணை செய்யத் தவறியதால் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையை குடும்பங்கள் கோரியுள்ளன.

வெளிப்படைத்தன்மை மற்றும் நீதி இல்லாமல் உண்மை மற்றும் நல்லிணக்கத்தை அடைய முடியாது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சர்வதேச சமூகத்திடம் பின்வரும் கோரிக்கைகளை விடுத்துள்ளனர்.

1.சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சாசனம் மற்றும் ஏனைய சர்வதேச சட்டக் கட்டமைப்புகளை ஏற்றுக் கொள்ளுமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்தல்.

2. தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் மற்றும் அடக்குமுறைகளைக் கண்காணித்து விசாரிக்க சிறப்பு அறிக்கையாளரை நியமித்தல்.

3. அனைத்து அரசியல் கைதிகளும் எந்த தாமதமும் இன்றி விடுவிக்கப்படுவதை அல்லது நீதியின் முன் நிறுத்தப்படுவதை உறுதி செய்தல்.

4. தீர்மானங்கள் மற்றும் ஐ.நா. அறிக்கைகளில் தமிழர்கள் மீதான இனப்படுகொலை உட்பட மனித குலத்துக்கு எதிரான இலங்கையின் குற்றங்களை வெளிப்படையாக ஒப்புக் கொள்ளுதல்.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை அனுசரிக்கும் இவ்வேளையில், ஆஸ்திரேலியத் தமிழர்களாகிய நாம் இலங்கையில் காணாமல் போன தமிழர்களின் குடும்பங்களுடன் ஒற்றுமையாக நின்று அவர்களின் உண்மை மற்றும் நீதிக்கான வேட்கைக்கு ஆதரவளிக்கிறோம்.

அவர்களது போராட்டம், தங்களுக்குப் பிடித்தவர்களின் தலைவிதியை வெளிக்கொணருவது மட்டுமல்ல, இது மனித மாண்பு, பொறுப்புக்கூறல் மற்றும் துன்புறுத்தப்பட்ட தமிழ் சமூகத்தின் எதிர்கால அமைதிக்கான போராட்டமாகும்.

காணாமல் போனவர்களை மறக்காமல், அவர்களின் குடும்பங்கள் வரலாற்றின் துயரத்தில் விடாமல் பார்த்துக் கொள்வது சர்வதேச சமூகத்தின் கூட்டுப் பொறுப்பாகும். தமிழர்கள் உள்ளூர் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளிடம் இருந்து பரந்த ஆதரவை நாடுகின்றனர் மற்றும் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் தலைமையிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைக்க உதவ வேண்டும் என்று வட கிழக்கு மாகாணங்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கமும் ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் வலியுறுத்துகின்றன.

# இன்றைய ராசி பலன்கள் -30.08.2024




இன்று அவ்வளவு எளிதாக எதையும் பெற முடியாது. எனவே கவனமாகவும் உறுதியாகவும் செயல் பட வேண்டிய நாள்.

பணியைப் பொறுத்தவரை இன்று பலன் தரும் நாளாக இருக்காது. இன்று கூடுதல் பணிகள் காணப்படும். என்றாலும் நீங்கள் நீங்கள் முறையான திட்டமிடல் மூலம் பணிகளை கையாள்வீர்கள்.

உங்கள் தாயுடனான கருத்து வேறுபாடு வீட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும். நீங்கள் சூழ்நிலையை பக்குவமாக கையாள வேண்டும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. உங்கள் ஒவ்வொரு பணத்தையும் கவனமாக செலவு செய்ய வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காக பணம் செலவு செய்ய நேரும்.




இன்று பாதுகாப்பின்மை உணர்வு நிரம்பி காணப்படும். எனவே எந்த விஷயத்தையும் நீங்கள் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் அதிக பொறுப்புகள் காணப்படும். பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இது உங்கள் ஆர்வத்தை மேம்படுத்த உதவும்.

நீங்கள் உங்கள் உறவில் உள்ள பிரச்சினையை தீர்ப்பதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் துணையிடம் இது பற்றி பேசுவீர்கள்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைவு. உங்கள் செலவுகளை கண்காணிக்கவும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று நீங்கள் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் காணப்படுவீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்களின் நட்பு பட்டியலில் கூடுதல் நண்பர்கள் இடம் பெறுவார்கள்.

உங்கள் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் தொடர்பாடல் திறன் உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை மேம்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஊக்கத்தொகை வகையில் இன்று உங்களுக்கு பண வரவு காணப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சிறப்பாக வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிக்கும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் அணுகுமுறையில் நம்பிக்கை காணப்படும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் திறமையை பயன்படுத்தி நன்மை அடைவீர்கள் மற்றும் இலக்குகளை குறித்தநேரத்தில் அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பாக நேரத்தை செலவிடுவீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு சென்று மகிழும் வாய்ப்பு உள்ளது.

சிறுகடன் வகையில் இன்று பண வரவு ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள போதிய அளவு பணம் காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியம் மற்றும் திடகாத்திரம் பராமரிப்பீர்கள்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண போராட வேண்டும். தியானம் அல்லது யோகா பயில்வதன் மூலம் பதற்றத்தைச் சமாளிக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும்.பதற்றத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் தவறு காண்பீர்கள். இதனால் விரோதம் விளையும். இதனை சமாளிக்க முயல வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் நிதிநிலையை சமாளிக்க நீங்கள் கண்டிப்பான திட்டம் மேற்கொள்ள வேண்டும்.

சளி மற்றும் தலை வலி காரணமாக உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




எதிர்மறை எண்ணங்கள் உங்கள் நம்பிக்கையை குலைக்கும். நீங்கள் நம்பிக்கை உணர்வை மேற்கொள்ள வேண்டும்.

மந்தமான சூழ்நிலை காணப்படும். உங்கள் செயல்திறன் மூலம் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.

உங்கள் துணையின் நடத்தை உங்களை உணர்ச்சிவசப்பட வைக்கும். இது குடும்ப சூழ்நிலையின் மகிழ்ச்சியை குறைக்கும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அது மகிழ்ச்சிகரமாக இருக்கது. உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும். நிதிநிலையில் ஏற்றத்தாழ்வுகளை சந்திப்பீர்கள்.

பதற்றமும் பேரார்வமும் ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல.இத்தகைய உணர்வுகளை சமாளியுங்கள்.




நீங்கள் விரைந்து பணிகளை முடிப்பீர்கள். உங்கள் தன்னம்பிகையை வளர்த்துக் கொள்வீர்கள்.

உங்கள் பணியில் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள். அதிக வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உறவுமுறையில் உற்சாகம் காணப்படும். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சமூகமாக இருக்கும். இன்று அதிக பண வரவு காணும் நிலையில் இருப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்த விதமான பெரிய பிரச்சினையும் இருக்காது.




உங்கள் செயல்களை கண்காணிக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் போராட வேண்டும். சூழ்நிலையை பொறுமையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

சக பணியாளர்களுடன் பயணம் மேற்கொள்வீர்கள். உங்கள் கீழ் பணி புரிபவர்களிடம் கவனமாக இருங்கள்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடத்த வாய்ப்புள்ளது. உங்கள் இருவரிடமும் நல்ல புரிந்துணர்வு இல்லாததே இதற்கு காரணம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. நீங்கள் அதிகம் செலவு செய்வீர்கள். இதனால் பணப் பிரச்சினை உருவாகும்.

பதற்றம் காரணமாக தலை வலி ஏற்படும். தியானம் மூலம் ஆறுதல் பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.08.2024




இன்றைய நாள் உங்களுக்கு உகந்த நாளாக இருக்காது.இன்றைய நாள் சுமூகமாக இருக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணியிடத்தில் கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டியிருக்கும். உங்கள் பணிகளை திறமையான முறையில் ஆற்ற நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

அகந்தைப் போக்கு காரணமாக உறவில் இணக்கமின்மை காணப்படும்.எனவே இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

தலைவலி மற்றும் முதுகுவலியால் நீங்கள் பாதிக்கப்படலாம். எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று சிந்தனை மிகுந்த நாளாக இருக்கும். எனவே உங்கள் இலக்குகளை திட்டமிட்டு மேற்கொள்வது நல்லது.

இன்று பணியிடத்தில் மிதமான பலன்களே கிடைக்கும்.நீங்கள் பணியில் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இன்று பணப்பற்றாக்குறை காணப்படும்.

நீங்கள் தலை வலியால் பாதிக்கப்படலாம். ஓய்வுக்கு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படும். சுய முயற்சி மூலம் உங்கள் கடின உழைப்பிற்கு பலன் பெறுவீர்கள்.

பணியில் பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

காதலர்களிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் இருவரும் உறவில் கடந்த கால வேறுபாடுகளை மறந்து உறவை புதுப்பிக்கலாம்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் மூலம் நீங்கள் நன்மை அடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பாக உறவாடுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். பங்கு வர்த்தகம் மூலம் பண வரவு காணப்படும்.

நம்பிக்கையான எண்ணம் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.

